www.tamilarangam.net



# மலர் - 3

3 UDGAVE




- SEINE ; FRANCE

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# சஞ்சீவி

மலர்-3

## ஐப்பசி - 1989.

அட்டைப் படம்,
விளக்கம்..
இவனுக்கு
மட்டுமல்ல
எமக்கு[ம்]
வேண்டும்
விடுதலை.

-சிவா-

விலை




PRIS

## உள்ளடக்கம்

* ஆசிரியர் பக்கம் 3
* கலையரசியே...-ஆராதனா- 4
* திருக்குறள் விளக்கவுரை 5
* கவிதை 6
* எங்கே போனீர்கள்....-சிறுகதை- 7
* குறுக்கெழுத்துப் போட்டி இல-3 16
* Sov sødt og drøm behageligt 20
* சற்று சிரிப்போமா..... 23
* சஞ்சீவியின் பக்கம்.... 24
* Drømmen om dråben i det Indiske Ocean 26
* இந்து சமுத்திரத்தின் சொட்டின் கனவு 28
* சிறுவர் அரங்கம் .... 30
* பேராசை -[நகைச்சுவைச் சிறுகதை] 32
* குறை கூறும் பழக்கத்தை மாற்றுவோம் 40
* வாசகர் அரங்கம் — [கடிதங்கள்] 42
* சிரிக்கச் சிந்திக்க ... 43
* "X"RAY. [கட்டுரை] 47
* அன்பே நீ எங்கே — [சிறுகதை] 49
* ஓவியங்கள்— 55

# தமிழ்-டனிஷ் நட்புறவுச் சங்கம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஆசிரியர் பக்கம்

வாசகர்கள் மத்தியில் எமது இரு பிரசுரங்களும் இலவசமாக விநியோகம் செய்யப்பட்டது யாவரும் அறிந்ததே.

இலவச வெளியீட்டின் மூலம் பெரும் தொகைப் பணம் செலவிடப்படுவதால், பத்திரிகையின் நடவடிக்கைகளில் ஆரம்பத்தில் உதவியளித்த தமிழ் - டெனிஷ் நட்புறவுச் சங்கம் தொடர்ந்தும் இலவச வெளியீடுகளுக்கு உதவுவதன் மூலம் பெரும் பணநெருக்கடியையும் தனது செயற்பாடுகளில் அசௌகரியங்களையும் எதிர்நோக்கும் நிலைக்குத் தள்ளப்படுகிறது.

பத்திரிகையைத் தொடர்ந்தும் வெளியிடுவதற்கு சுயபொருளாதாரம். பலத்தை ஏற்படுத்திக் கொள்ளும் அவசியத்தை நாம் உணர்ந்துள்ளோம்.

பத்திரிகை பிரசுரிக்கும் செலவுகள்; பிரதிகள் வழங்குவதற்குத் தேவையான பணம்; தட்டச்சு கொள்வனவு போன்ற நான்கு செலவுகளை முன்வைத்தே விலை நிர்ணயம் செய்யப்பட்டது.

ஏற்கனவே இதழ் ஒன்றின் விலை 15 குறோணர்களாகத் தீர்மானிக்கப்பட்டு எமது இரண்டாவது இதழ் மூலம் விலை தெரிவிக்கப்பட்டது. எனினும் பத்திரிகைக் குழு விலைக்குறிப்பை மறுபரிசீலனை செய்து அதன் விலையை 10 குறோணர்களாக ஆக்கியிருக்கிறது என்பதை அறியத்தருகிறோம்.

வாசகர்களாகிய உங்கள் ஆக்கங்களை அனுப்பும் போது ஆக்கங்கள் எழுதிய காகிதத்தில் வலதுபக்க மேல் மூலையில் உங்கள் சொந்தப் பெயர், முகவரி என்பன எழுதப்படுவது அவசியம்.

ஆக்கங்களை சொந்தப் பெயரிலோ அன்றி புனைபெயரிலோ எழுதலாம். புனைபெயரில் எழுத விரும்பும் ஒருவர் தனது புனை பெயரை எழுத்து மூலம் உறுதிசெய்யவேண்டும்.

பிற நூல்களில் அல்லது பத்திரிகையில் உள்ளவற்றைப் பிரதி செய்து அனுப்பப்படும் பட்சத்தில் அந்த ஆதாரங்களை குறிப்பிட்டிருத்தல் அவசியம். மாறாக இன்னொருவரது சொந்த ஆக்கங்களைப் பிரதி செய்து அதில் உங்கள் பெயரை எழுதுவது தவிர்த்துக் கொள்ளப்படல் வேண்டும்.

எமது பத்திரிகை அறுபது பக்கங்களைக் கொண்டதாகும். சிறுகதைகள் 3 முதல் 5 பக்கங்களில் அடங்கியிருக்க வேண்டும். ஏனைய அம்சங்கள் 2 முதல் 3 பக்கங்களில் அடங்கியிருத்தல் அவசியம். இதற்கேற்ப ஆக்கங்களை அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எனவே புனிதமான பத்திரிகைப் பணிக்கு களங்கம் ஏற்படாத வகையில் நாம் முன்னெடுத்துச் செல்லும் பாதையில் அனைவரும் இணைந்து செயற்பட ஒன்று படுவது மிக அவசியம்.

பத்திரிகைக் குழு,

## கலைவாணியே......

பாவலர்க்கு வித்தகியே
பட்டு உடுத்தி வந்தவளே
நித்தமிசைமீட்டி - வெண்
தாமரையில் அமர்ந்தவளே

கற்பவர்க்கு ஆசானாய்
கருத்துணையாய் இருப்பவளே
நித்த நித்தம் நாம் வந்து
நற்பாக்கள் சாற்றிடுவோம்

பொற்பதியே! பூபதியே!!
பூ தலாதிபதியே !!
பற்பலவும் செய்தெமக்கு
பார்போற்ற உய்த்திடம்மா

போரகற்றி புதிதுணர்த்தி
போற்றியமை வளர்த்திடம்மா

தேவியே ! எம் தெய்வத்தாயே !!
தேடியுனை வணங்குகின்றோம்.

- ரஜானி -



www.tamilarangam.net


# திருக்குறள் விளக்கவுரை

புறம்கூறிப் பொய்த்து உயிர் வாழ்தலின் சாதல்
அறம்கூறும் ஆக்கம் தரும்.

பதவுரை:- புறம்கூற- காணாதபோது இகழ்ந்து பேசி. பொய்த்து- கண்டபோது பொய்யாக மகிழ்ந்து பேசி. உயிர் வாழ்தலின்- உயிர் வாழ்வதைவிட. சாதல் - உயிர் விடுதல். அறம் கூறும் - தரும நூல்களில் சொல்லப்பட்ட. ஆக்கம்- பயனை. தரும்- கொடுக்கும்.

விளக்கவுரை:- காணாதபோது பழித்து. கண்டபோது புகழ்ந்து உயிர் வாழ்வதைவிட இறத்தலே நலம்.

✿ புறம் கூறாமை ✿
குறள் இல:- 3 [மூன்று]



www.tamilarangam.net



# கவிதை

## சஞ்சீவி

சஞ்சீவியே உன்னை
நான்
சந்தித்தேன்
உனக்காக உதிரத்தைப்
பிழிந்து
வியர்வையாக்கி
உள்ளன்போடு
ஆக்கங்களை ஆக்க
துணிந்தேன்
என்னையும்
இதயமதில் ஓர் துளி
இடம் கொடுத்துச்
சேர்த்துக் கொள்
எனது
உள்ளமது
பல மைல்கள்
சிறகடித்து
பறந்து வந்து
அணைத்துக் கொள்வதை
சஞ்சீவியே உன்னால்
தடுக்கமுடியுமா?

ஜெயந்தி
மட்டக்களப்பு

அன்புடையீர் இந்த இரவு
இன்று இளைப்பாறட்டும்
நாளை எமது இதயத் துடிப்பால்
புதுமை செய்வோம். நிச்சயமாய்
புதுமை செய்வோம்.
அதுவரை
அமைதி, அமைதி, பொறுமைவேண்டும்

தி. திசொ

www.tamilarangam.net



சிறுகதை

# எங்கே போனீர்கள்

மீரா.

வீட்டின் பின் கோடிவரை சைக்கிளை வேகமாக ஓட்டிவந்தபடி, பனிக்கால குளிர்கலந்த வெய்யிலையும் சின்னச் சின்ன சிவப்புப் பூக்களின் அழகையும் அனுபவித்தபடி வந்த சேகருக்கு வீட்டின் முன்னேயுள்ள தபால்பெட்டியைக் கண்டதும் அவனையுமறியாமல் அவன் கால்கள் பெடலை ஊன்றி அழுத்தியதை உணர்ந்தபோது பெரிய ஆச்சரியமாக இருந்தது.

அன்று செவ்வாய்க் கிழமை. வழமையாக இலங்கைக் கடிதங்கள் வரும் நாள்.

அக்கம் பக்கத்து வீட்டு வெள்ளைகளின் ஏகடியங்கள்; ஆசிரியத்தொழிலால் இலங்கையில் தன் வேலையை ஏற்கப்படுபடியாத பணத்தேவைகளின் அவசரங்கள்; அவனுள் ஏற்கவும் முடியாத மறுக்கவும் முடியாத.. வேறாக அவனுக்கே புரியாததொன்று [illegible] அரசியல்; இத்தனையின்றும் தன்னைத்தான் காப்பாற்றத் தானே சூட்டிக் கொண்ட 'அகதி' என்ற பட்டை நாமம். தாய் தந்தை சகோதரர்களது அன்பை விட்டுப்பற்றி கவலை கொள்ளும் அவனுள் வெளி உலகத்தை... ஏன் தன்னைப் பார்க்கக் கூட அவகாசம் கிடைக்கவில்லை. கவலைகள் நிறைந்த அவனது பாரத்துக்கு அவனது பெற்றோரின் கடிதங்கள் மன ஆறுதலைக் கொடுக்கும். அவ்விசயத்தில் தபால் பெட்டியின் கனம் அவனுக்குத்தான் புரியும்.

சைக்கிளில் இருந்து இறங்காமலேயே கால்களைப் பட விழும் வலியிலும் ஊன்றிக் கொண்டு தபால் பெட்டியைத் திறந்தான். இரண்டொரு மலிவு விற்பனைப் பத்திரிகைகள்; 'வயிறு அடங்க'' உடற்பயிற்சிப் பாடசாலையின் திறப்பு விழா அழைப்பிதழ்; அதன் கீழே வீட்டு வாடகை ரசீது; அதன் கீழே நீல நிறத்தில் ஓர் ஏரோகிராம். கடற்கரையும் தென்னைமரமும் இலங்கையென உறுதிப்படுத்தியது. வேறு ஏதாவது கடிதங்கள் இருக்கிறதா எனத் துழாவிப்பார்த்தான். இல்லை. அந்தக் கடிதத்தை சிறிசேனன் போட்டிருந்தான். அவன் ஓர் அகதியான்.

www.tamilarangam.net

சைக்கிளை வாசலில் சாத்திவிட்டு; பக்றரி உடுப்பைக் கூட எடுக்கத் தோன்றாமல் வீட்டுக்குள் வந்து அவசர அவசரமாகக் கடிதத்தைப் பிரித்தான்.

பகல் நேரக் யன்னல்கள் மூடியிருந்ததால் வீட்டினுள் ஒரே வெம்மையும், மேல் கோட் சுழற்றாததால் உடம்பில் எரிவு தோன்றினாலும் அந்த யன்னலைத் திறக்கவோ, கோட்டைக் கழற்றவோ ஏனோ தோன்றவில்லை.

கடலோன் நீயோ; வீட்டுமுல் அலைவரும் சோகம்;
அடி சொல்லும் சொற்றின் சொட்டு; என்ற சம்பிரதாய

வரிகளைத் தாண்டிக்கொண்டு சென்ற குமாரின் கண்கள் ஓர் இடத்தில் நின்று நின்றது. பிரிக்கனேசன் ஓர் கவிதை எழுதி "குமார் இவைபற்றி நீ என்ன நினைக்கிறாய்" எனக் கேட்டிருந்தான். கவிதையைப் பார்த்தபோது ஓர் நமட்டுச் சிரிப்பு முகத்தில் வந்தபோதும் சிறிது நேரத்தில் அந்த நமட்டுச் சிரிப்பு அடங்கி முகம் கொஞ்சம் இறுகியது.

எங்கேயோ கேட்ட அன்றிப் பார்த்த நிலை வரிகள், தொனியில் கொஞ்சம் மாறுபட்டு,

"என்னுடன் கோயில் வீதியில் கிட்டியடித்த
என் அருமைத் தோழர்களே!
எங்கே போனீர்கள்?" எனக் கடிதத்தில் இருந்தது.

'விசரா' என அன்புடன் அவனை வாய்க்குள் திட்டியபடி புன்முறுவல் பூத்த முகத்தில் தோன்ற கதிரையில் இருந்து எழுந்துபோய் யன்னலையும் திறந்துவிட்டு, கோட்டைக் கழற்றிப் போட்டுவிட்டுக் குளிக்க வெளிக்கிட்டான். ஏனோ மீண்டும் அந்தக் கடிதத்தை எடுத்துத் திரும்பவும் படித்தான். நேரம் ஓடிக்கொண்டிருந்தது. மனதில் ஆழமாகப் பதிந்துவிட்ட வரிகளை கண்கள் காரணமின்றிப் பார்த்துக் கொண்டிருப்பதை உணர்ந்து கொண்டு அக்கடிதத்தை பிரிக்கவொண்ணா [illegible] தொனிக்கு வினாடியை எப்படிப் புதிய லையது எனப் புரியாமல் கடிதத்தை கையில் வைத்துக் கொண்டு காரணமின்றி முன்பக்கமும் பின் பக்கமும் திருப்பித் திருப்பிப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அழகிய இலங்கையின் கடற்கரையும்; தென்னை மரமும்; கடலில் எழுந்து தாவும் அலைகளின் ஓசையும்; அது கொள்ளைக் கிண்பங்களின் வடிவும் அழகும்,

www.tamilarangam.net



மெல்லிய வெற்றோல் யன்னலின் திரைக்கைத் தொட வெளியில் பார்த்தான். வீதியில் கார்கள் நெரிந்து அடித்துக் கொண்டு போய்க் கொண்டிருந்தன.

இமார் அசையாது அப்படியே நின்றான்.

*

சுகப்பன் வெளிவிறாந்தையிலும், இரண்டு தங்கச்சிமாரும் தாயும் அறையினுள்ளும், நன்கு தூங்கிக் கொண்டிருக்கிறார்கள். சிவனேசராச்சி மட்டும் நித்திரை வராது உழன்று கொண்டிருந்தான். தலைமாட்டில் இருந்த கை மணிக்கூட்டைக் கைமட்டத்தில் தடவி எடுத்து அதனை அழுத்தி நேரத்தைப் பார்த்தான். பதினொரு மணிக்குப் பத்து நிமிடங்கள் இருக்கின்றன.

பாடசாலையும், டியூசனும், பல்லாங்குழி ஆட்டம்போல றோட்டுகளில் ஸ்கூட்டர் ஓட்டமும் என்ற அசதி வழமையாக அவனை பத்துமணிக்கே நித்திரையில் ஆழ்த்தி விடும்.

ஆனால் இன்று, கண்ணை மூடி மூடிப் பார்த்தாலும் ஏதோ தாறுமாறான நினைவுகள் ஓடுகின்றதே தவிர நித்திரை?.. நினைத்தும் கூடப் பார்க்க முடியவில்லை. நித்திரை வரும்வரை லைற்றைப் போட்டு ஏதாவது படித்துக் கொண்டிருக்கலாம் என்றால் அதுவும் முடியாது. இருட்டில் திடீரென தோன்றும் வெளிச்சங்களுக்கான காரணங்களை இயக்கங்களுக்கும் சிலவேளை இந்தியன் ஆமியினருக்கும் சொல்ல வேண்டி வரலாம். (நாடு) அப்படியொரு நிலையில் பிரகடனப்படுத்தாத ஊரடங்குச் சட்டத்தை முழு நாடுமே தமக்குத் தாமே பிரகடனப்படுத்திக் கொண்டு வாழ்ந்து (?) கொண்டிருக்கிறது.

கக்கூஸ் பக்கம் ஒரு தரம் போய் வந்தால் நித்திரை வரும் என நினைத்தவன், பின் ஏனோ அசாரித் தொட்டியில் நிறைத்து வைத்திருந்த தண்ணீரில் ஒரு வாளியை மெல்ல மொண்டு கொண்டு போனான்.

எந்தக் கிணற்றைச் சொந்த முயற்சியில் தோண்டி உழைத்துக் கண்ட — மூன்றாம் நாள் அவன் தாய்வழிப் பேரன் மாரடைப்பால் செத்துப் போனார். அப்படிப்

www.tamilarangam.net


போராடிப் பெற்ற தண்ணீரை சுதந்திரமாக அள்ளக் கூட நாதியற்றுப் போனோமே என்ற நினைவு அவனுக்கு வேதனையைக் கொடுத்தது.

கக்கூசில் கவிழ்ந்தான். கூடிய கெதி தவிர மலம் வரவில்லை. மாறாக கண்கள் இருட்டிக் கொண்டது. கால் இடுக்குகளில் இருந்த காயங்கள் விறைக்குமாப் போல் இருந்தது. தண்ணியால் கால்களைக் கழுவிப் போட்டுத் திரும்பப் போய்ப் படுப்பம் என நினைத்தபோது கக்கூசை அண்டியுள்ள வேலியின் பக்கத்தே வெளிப்புறமாக யாரோ நாலைந்துபேர் ஏறுவதுபோலக் கேட்டது.

அவனுக்கு நெஞ்சு 'திக்' என்றது. வயிறு ஒரு தரம் நடுநடுங்கி நின்றது. மெதுவாக ஓசைப்படாமல் எழுந்து கக்கூஸ் சுவரில் உள்ள ஓட்டையூடாக எட்டிப்பார்த்தான். இருட்டில் எதுவும் தெரியவில்லை. ஆனால் நாய்கள்மட்டும் அங்கும் இங்கும் குலைத்துக்கொண்டு ஓடிக்கொண்டிருந்தன.

எந்த வெளிச்சமோ அசைவோ தொடர்ச்சியாய்க் காணவில்லை. ஆனால் அடுத்த சில நிமிடங்களில் அந்த வெறும் வளவின் பனங்கூடலுக்கு நடுவில் உள்ள பாத்தியைச் சுற்றி இருந்து நாலைந்துபேர் மெல்ல மெல்லக் குசுகுசுப்பது கேட்டது.

"தாரோ இயக்கப் பொடியள் போல" என நினைத்த மறுகணமே, "இரவு கணேசனையும் சுட்டிட்டு கிழங்கு அடுப்பமோ" எனக் கதைத்தது போலக் கேட்டது. அவனுக்கு 'குப்' என வியர்த்து வழிந்தது.

"என்ன ஆருக்குத் தெரியும். தெரிஞ்சாலும் கிழங்கு அடுகிற கதை இந்த நேரத்தில் யார் கதைக்கிறார்கள்!" வயிற்றை என்னவோ கலக்கியது.

இவ்வளவு நேரமும் போராடியும் போது வராத மலம் இப்ப முந்திக்கொண்டு வந்து அவனைப் படுத்தியது. மலக் குழியில் குந்தினான்.

"இங்காலப் பக்கம் வராமல் கண்ணை மூடிக்கொண்டு படுத்திருச்சாப்போம்" என நினைத்துக் கொண்டு, மலம் தன் வழியே போக தானே வெளியே எழுந்து போகப் பயந்தமாதிரி உட்கார்ந்திருந்தான்.

எந்தச் சத்தமோ, சனங்களோ, நாய்ச்சத்தங்களோ கேட்கவில்லை என உறுதிப்படுத்திக்கொண்டு தண்ணிவாளியைக் கிட்டவாக அரக்கினான். அப்போ மூக்கினுள் ஏதோ மணம் துளைத்தது. இது கிழங்கு அடுகிற மணம். அப்போ... அப்போ...

www.tamilarangam.net



வெளிச்சம் ஏதாவது தெரிகிறதா என கக்கூஸ் கதவு நீக்கலூடாகப் பார்த்தான். ஊஹூம்.... ஆனால் கிழக்கு அறும் மணம் மட்டும் கூடுதலாக வந்தது. சிறீகணேசனுக்கு வியர்வையில் உடல் தெப்பமாக நனைந்தது.

கண்ணின் முன் அரசடிப் பிள்ளையாரை மனதுள் வேண்டினான். அவர்தான் அப்போதைக்கு அவனுக்குத் துணை.

சின்னவயதில் தாயுடன் பிள்ளையாரப்பா, பிள்ளையாரப்பா என தாயின் பேச்சுத்துணையுடன் பிள்ளையாரைச் சுற்றிச் சுற்றி வந்து, பின் அறிவு வந்த பின் "விஞ்ஞானம்" அறிந்தபோது பிள்ளையார் இருக்கிறாரா என்று X, Y என்ப பின்னம் போட்டுப்பார்த்து, இந்தியன் ஆமி வந்தநாட்களின் தொடங்கி கதைத்த வீராப்புகளில் இருந்து இறங்கிவிட்டால் என நண்பர்கள் ஏளனம் செய்வார்கள் எனப் பயந்து, கோவிலைத் தாண்டும்போது எங்கேட்டார் கேட்கத்தைக் கோரத்து கிடைக்கண்ணால் பிள்ளையாரைப் பார்த்து வந்த சிறீகணேசன் இப்போது முதலாகவே கக்கூசுக்குள் இருந்து பிள்ளையாரை வேண்டினான். அரைட்டானம் பார்த்து, அட்டாங்க நமஸ்காரம் செய்து, கொடிக்கம்பத்தின் முன் விழும் போது வருகிற பயமெல்லாம் சிறீகணேசனுக்கு இன்னமும் சுத்தம் செய்யப்படாத உடம்போடு கக்கூஸில் வந்தது.

பிள்ளையார் காப்பாற்றித்தான் விட்டார். மலங்கழிக்கும் மணம் அறவே நின்றுவிட்டது. எந்தச் சத்தத்தையும் காணவில்லை. பிள்ளையாருக்குக் கற்பூரம் வேண்டிக் கொளுத்துவோமென்று என நினைத்துச் சொன்னபடி தண்ணீரால் கழுவிவிட்டு சாரத்தை உதறிக் கட்டிக்கொண்டு சின்னப் பயம் மனதில் அப்போதும் இருக்க எழுந்து வெளியே பார்த்தான்.

அந்த அறையொட்டும் இல்லை. வெளியே வந்து மின்கிடை வெளிச்சத்தில் துவாலை எடுத்து உடம்பைத் துடைத்த போர்வையை எடுத்துப் போர்த்தித் துடைத்தான். "உடம்புதில்' கொஞ்சம் குளிர்கிறது. ஒரே சின்னச் சுரமும் தெரிகிறது."

அந்தச் சத்தத்தில் ஒரே விளையாட்டுதான் நடந்திருப்பான். பிள்ளையார் கோவிலின் அரசடிப் பக்கத்திலிருந்து காலில் நாயொன்று சுவரில் விளையாடுவது போலிருந்தது. நாய்களின் சத்தம் படிப்படியாக தொடங்கியது.

சிறீகணேசனுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. திரும்பவும் எழும்புவோமா என யோசித்தான். "அவரு என்

www.tamilarangam.net

இந்த வெட்டு போன காலத்திலே" என நினைத்தான். மேலும் சிந்தனையில் நிற்காமல் அவசர அவசரமாக வந்து பாயில் விழுந்தான். உடம்பு பாயில் விழுந்தாலும் காதுகள் மட்டும் வெளியே கூராக நீட்டிக் கொண்டு நின்றது.

யாரோ கோலியடிபல் விளையாடுகின்றார்கள்? யார் இந்த நேரத்தில் விளையாடுவது? குழந்தைகள் கூட இந்த நேரத்தில் யானைக்கு அஞ்சி பயப்படும் இந்த இரவில் யார் விளையாடுவது? "டேய் குண்டு பத்தாது". சிந்தனைக்குத் திக்கென்றது. எந்தக் குண்டு பத்தாது. இன்னும் இலங்கையை அழிக்கக் குண்டு பத்தாதா? நிலமும் சொத்தும் சூறையில் குண்டுகள் பத்தாதா? இல்லை... இல்லை.. விளையாடுறவங்கள் ஏன் குண்டையப்பற்றிக் கதைக்கவேணும். அப்போ என்ன விளையாடுகிறார்கள்? ஓ! கோலிக்குண்டு விளையாடுகிறார்கள் அல்லது கிட்டியடிக்கிறார்கள். கிட்டி? கிட்டி??.

அடிபட்ட, இயக்கங்கள் அட்ட வெடியாலின்று ஆமியன் வந்து கூத்தடிக்கிறதோ? அப்படியாயின் விட்டுள் மாறு ஆர்ப்பாட்டத்துக்கு சத்தங்கள் கேட்கவில்லை. அக்கம், பக்கம் எல்லாம் அமைதியாகத் தூங்க ஜன் வெளிக்கு மட்டும் கேட்கிறது. இல்லை... இது என் மனப் பிரமையோ?

விடைகள் தெரியாமல் கேள்விகளை மட்டும் ஒன்றுக் கொன்றாக அவன் மனம் அடுக்கிக் கொண்டு சென்றது.

அப்போது அவனுக்கு நன்கு பழக்கப்பட்ட ஒரு குரல் "டேய்! விளையாடினது போதும் சிறுசுகளா வீட்டுக்குத் தெரிஞ்சா பிலே இனாக்கர் பறிப்போமடா" என்று சொல்லியது.

மனம் திக் கொண்டது. இது யாருடைய குரல்? கிறுக்குத்தனமாக டேன் என்கிறதே. ஐயோ... ஐயோ... இது எனக்கு தெரிந்தவரின் நினைவுக்கு வருகிறதில்லையே என மனம் வெம்பிட்டது.

மனத்தின் குழப்பங்களுக்கும் உடலின் உஷ்ணத்துக்கும் அவனது ஆர்ப்பாட்ட எண்ணக் காரணமும் கண்டுபிடிக்க முடியாமல் காற்று வரட்டும் எனத் திறந்துவிட்டிருந்த யன்னல்களிரண்டையும் அவசர அவசரமாகச் சாத்தினான்.

போர்வையை எடுத்து தலையுதல் கால்வரை முழுக்க மூடிக் மறைத்துக் கொண்டு முடங்கியபடியே பாயில் சுருண்டு படுத்தான்.

www.tamilarangam.net



ஆனால் அவன் காதுகளை மட்டும் தெருவும் மூடமுடியவில்லை.

சோலையடியில் இருந்து கொக்குக் காலைச் சத்தங்கள் அவர் வீட்டுப் பின் தென்னங்காணியுள் தூரத்தில் பாய்வதைக் கேட்டு உணர்ந்தான்.

"பிள்ளையாரே! பிள்ளையாரே" எனப் பிள்ளையாரை இழுத்து தன்னுடன் வைத்திருந்தான்.

ஆனால் அடுத்தகணமே 'தொப் தொப்' என்று இளநீர்கள் விழத்தொடங்கியதும் அவன் பிடியிலிருந்து பிள்ளையாரும் விட்டுப் போய்விட்டார். இப்போ அவனுக்கு ஒன்றுமே தெரியவில்லை.

போர்வைக்குள் உடம்பு மட்டும் வியர்வையால் பிசுபிசுத்தது — திடீரென பிள்ளையாரில் கொண்ட நம்பிக்கை போல.

*

"என்னடா கிரி! இன்றைக்கும் பள்ளிக்குப் போறதில்லையோ... கொப்பரும் காலைநேரத்தோடை இறைப்புக்குப் போகேக்கை உன்னை எழுப்பச் சொல்லிப்போட்டே" என்றபடி வந்து கிரிசேகரனை தாயார் எழுப்பினார்.

"நீ யன்னலெல்லாம் சாத்திப்போட்டு உந்தக் கானன் பாவனத்துக்கை போர்த்துக் கொண்டு கிடக்கிறாய். எழும்பு... எழும்பு..." என்றபடியே யன்னலெல்லாம் திறந்துவிட்டு குசினிக்குள் சென்றார் தாயார்.

கிரிசேகரன் கண்களை அகல விரித்து சுற்றுமுற்றும் மிரண்டு, பிசாசைப் பார்த்தான். எல்லாம் ஓர் பிரமை போலப்பட்டது.

சூரிய வெளிச்சம் வாசலில்பட்டு தெறித்துக் கண்களைக் கூசவைத்தது.

உடம்பை முறித்துக் கொண்டு எழுந்து மெதுவாய் பின் பக்கத் தென்னை வளவுக்குள் போனான்.

"என்னடி பிள்ளை... கொண்ணைக்கு பள்ளிக்கு நேரமாப் போச்சு முகமும் கழுவேல்லை, கக்கூசுக்கும் போகேல்லை. பின் காணிக்குப் போறான்".

"அண்ணைக்கு உவங்கள் வெடிபோட்ட பள்ளிக்கூடத்திலும் இல்லை என்று படிப்பிக்க வந்தாலும் எரிந்து விழுகிறான்". இது தங்கச்சியாள்.

தென்னங்காணி முடிக்க சுற்றிச் சுற்றி கொண்டான்.

www.tamilarangam.net

ஒரு தென்னையின் அடி பழுத்த தேங்காய் ஒன்று மட்டும் விழுந்து கிடந்தது. அருகே ஒரு காகிதமும். வேறு எதுவும் காண வில்லை.

அவனுக்கு ஒரே வியப்பாய் இருந்தது. தென்னங்கன்றுக் கிடப்பு வழியே பனங்காணிக்குப் போய் பாத்திகளைச் சுற்றிச் சுற்றிப் பார்த்தான். பாத்தியும் பனங்கொட்டைகளும் வழமை போல இருந்தன. ஏதாவது காலடிச்சுவடுகள் தெரிகின்றதா என்னக் கவனித்துப் பார்த்தான். எதுவும் இல்லை.

எல்லாம் மாயமாக இருக்க திரும்பி வீட்டை பார்த்து, இரவின் பின் எரிச்சலும், அடைப்பு நெருப்புக் குத்தத் திடீரென சங்கீதா தின்னிறை அள்ளிக் கொட்டிவிட்டு பள்ளிக்கூடம் போக ஸ்கூட் டரைத் தள்ளிக் கொண்டு ஒழுங்கைக்கு வந்தான்.

அவனுக்கு பேப்பரைப் பார்க்கத் தாயார் ஒழுங்கையின் முனையில் வந்து நின்றார்.

"என்ன பேசாமல் நிக்கிறியள். இன்டைக்கு நேற்றுதான் தம்பிக்கு வெளிநாட்டுக் கடிதக்காரனை வந்திருக் கிறான்" என்றபடியே பியூன் கணேஷ் ஒரு கடிதத்தை அவன் கைக்குள் திணித்தார்.

"எப்படி கணேசண்ணே... என்ற சுகமான விசாரிப்பு டன் கடிதத்தைச் சிரிக்கொண்டே வாங்கினான்.

கடிதம் டென்மார்க்கிலிருந்து குமார் போட்டிருக்கிறான்.

"சுகத்துக்கென்ன.... நாளைக்கும் நான் கடிதம் குடுக்க கிடையாமல் வழியிலெட்டால் அதுதான் சுகம்." என்றும் பொறுத்தப்பட்ட பொற்றீன் வாயின் கேள்விகளையும் அடித்தபடியே காறி விட்டு சைக்கிளில் ஏறிக் கொண்டு சென்றார்.

ஸ்கூட்டரை ஸ்டாட் செய்யாமல் படலையடியில் நின்ற படியே கடிதத்தைப் பிரித்தான்.

"எவ்வளவு போட்டியுள் என்று பெரிசாய் சிரிக்கப் பார்க்காதை "விசா"! பகலில் எங்களால் எங்கும் அசைய முடி யாது. சக்தியான இயந்திரங்களின் தாக்கங்களுக்கு ஈடு எமக் கைகளும் கால்களும். சாவிகளும் பூட்டுமாகக் கொண்டு இருக்கும். அதில் இரவில் சாப்பிட்டு படுக்கையில் விழுந்தால் அதன் பின்பு நாம் எங்கே நிக்கிறோம் என்று உங்களால் சரி யாக முடியாது. காரணம் என்ன கஷ்டம், கவலைகள், பாரப் போராட்டங்கள் இருக்காதும் அப்பா, அம்மா இருக்காதாவ்

www.tamilarangam.net



சாதனைகள் என்பனவற்றுடன் கட்டியணைத்துக் கொண்டு இன்புறு யாக நீங்கள் தூங்கிவிடுவீர்கள். அப்படித் தூங்குகிற உங்க ளால், இரவில் எங்கள் அவலங்களைப் புரியவோ முடியாது. அதைப் புரிகிற திறன் உங்களுக்கு இருந்தால் நாங்கள் ஏங் கிப் போய்விடவில்லை என புரிந்து கொள்வீர்கள்.

அன்புடன்
குமார்.

கடிதத்தை வாசித்த கிருகணேசன் எக்கட்டுடன் வீட்டிலுள்ளோர் தீர்ப்ப அடிபட்டுக் கொண்டு போய் தெருக்கோடியில் நிறுத்திவிட்டு திக்பிரமை பிடித்தவன் போல் வீட்டுவாசலில் உட்கார்ந்தான்.

தாயார் ஒன்றும் புரியாமல் அவனைப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

தமையனுடன் எக்கட்டத்தில் பாடசாலைக்குப் போகும் வெளி க்கிட்ட தங்கச்சி யாரும் தமையனின் திடீர் மாற்றத்தைப் புரிந்துகொ ள்ள முடியாது தாழ்வாரத்தும் அவனின் பக்கமாக பேசாமல் நின்று கொண்டிருந்தாள்.

கிருகணேசன் மட்டும் மௌனமாக யாரையும் பார்க்காமல் கடிதத்தில் கண்கள் நிலைகுத்தி நிற்க வாசற்படியில் உட்கார் ந்திருந்தான். அன்று அவன் பாடசாலைக்குச் செல்லவில்லை.

(யாவும் கற்பனை)

---

[illegible] எதிர்ப்பாளர்கள் ஆதரவளிப்பவர்கள், நேசிப் பவர்கள், தன்னை அலட்சியப்படுத்துபவர்கள் நெருக்கடி யில் இருப்பவர்கள், தன்னை வெறுப்பவர்கள், உறவி னர்கள், சாதுக்கள், பாவிகள்; இவர்கள் அனைவரிட மும் ஒரே மாதிரியாக நடந்து கொள்பவன் உன்னதமானவன்.

பகவத்கீதை. கர்மயோகம்.

சகல ஞானங்களும் கைவரப் பெற்ற ஒருவன் தனக் குப் பிரியமான ஒன்று கிடைத்துவிட்டால் "ஓகோ" என்று குதிக்கவும் கூடாது, தான் விரும்பாததை அடைய நேர்ந்தால் அழவும் கூடாது!

ப.கீ. சந்நியாச யோகம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# குறுக்கெழுத்துப் போட்டி. 3
# KRYDS OG TVÆRS.

சஞ்சீவி



மலர்-3. உங்களுக்-
காக மகிழ்வுடன் வழங்கும் இப்-
போட்டிக்கு அனைவரையும் அழை-
க்கிறது.

சஞ்சீவிக்காக நீங்கள் செய்யவேண்டியது குறுக்கெழுத்துக்கட்டத்தின் வெற்றிடங்களை கீழே கொடுக்கப்படும் இடமிருந்து-வலம், மேலிருந்து-கீழ் போன்ற கேள்விகளுக்கு சரியான விடை எழுதி:

"Chanchive" K&T:3,
Tamilsk Dansk Venskabsforening,
Danmarksgade 10,7500 Holstebro. என்ற

முகவரிக்கு இதற்கென நாம் தயார்செய்துள்ள தாளை வெட்டி எடுத்து பூரணப்படுத்தி எமக்கு அனுப்பிவையுங்கள்.

கேள்விகள்:- "இடமிருந்து வலம்."

1. இந்திரன் சபையை அலங்கரித்த நடனமங்கையருள் இவரும் ஒருத்தி.
10. அவதார புருசரான கிருஷ்ணர் தனக்காகவே அமைத்த மிக அழகு நிறைந்த பட்டணத்தின் பெயர் இது.
6. சீலையினால் செய்யப்படும் பின்னவேலைப்பாடமைந்த பொருட்களில் காணப்படும் வருணசீலையினை இப்படியும் அழைப்பர்.
15. சிறுபராயத்தில் சில குழந்தைகளுக்கு வரும் இந்த இருமலுக்கு மருந்தாக புலித்தோற்துண்டும், புங்கங்காயும் சேர்த்து கழுத்தில்கட்டுதல் முதியோர் வழக்கமாகும்.
19. வீக்கிங்காலத்தில் கடற்பிரயாணத்தின் போது இதுவே பயன்படுத்தப்பட்டதாக சரித்திரங்கள் கூறுகின்றன.
23. மன்னர் காலத்தில் இளவரசியின் தோழியை இப்படி அழைப்பர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கவனியுங்கள்

குறுக்கெழுத்துப் போட்டி சம்பந்தமான விபரங்களும் நிபந்தனைகளும்:

1. சஞ்சீவியின் செயற்குழு உறுப்பினர்கள் தவிர்ந்த யாவரும் பங்குகொள்ளலாம்.
2. போட்டியில் பங்குகொள்வோர், கட்டங்களைத்தையும், அத்துடன் சரியான முகவரியையும் தெளிவாக எழுதி இதழின் இறுதிப் பகுதியிலுள்ள கட்ட அஞ்சல் பத்திரத்தை பூர்த்தி செய்து சஞ்சீவிக்கு அனுப்பவைத்தல் (முகவரி குறுக்கெழுத்து அஞ்சல் பத்திரத்தில் பதிக்கப்பட்டுள்ளது).
3. வாசகர்கள் யாவரும் இப்போட்டியில் கலந்துகொள்ளலாம், ஆனால் இதழின் அசல் பிரதியே ஏற்றுக்கொள்ளப்படும்.
4. போட்டி முடிவுகள் பத்திரிகைக் குழு ஒருவரால் தெரிவு செய்யப்படும்.
5. மேற்கண்ட விதிமுறைகளுக் கமையவும், சரியாகவும், தெளிவாகவும் பூர்த்தி செய்யப்பட்ட போட்டிக் கூப்பன்கள் சீட்டிழுப்பு மூலம் 1ம், 2ம், 3ம் பரிசுகளுக்கான தகுதியினைப் பெறும்.
6. போட்டி சம்பந்தமான குழுவின் தீர்ப்பே இறுதியானது.
7. சரியான விடையும், பரிசு பெற்றோர் விபரங்களும் அடுத்த இதழில் வெளியிடப்படும்.
8. பரிசுகள் உரியவர்களுக்கு காலக்கிரமத்தில் அனுப்பிவைக்கப்படும்.

31. சிறையில் பிறந்த அவதார புருஷர் கண்ணன் வளர்ந்தது இந்த இடத்திலேயே.
37. சுமங்கலிப் பெண்களின் நெற்றியை அலங்கரிக்கும் இது இன்றியமையாதது.
44. இல்லத்தோரின் வீட்டு வருணமாகவும், துறவு பூண்டோரின் உடையாகவும் உள்ள இது, இங்கு இடம் மாறியுள்ளது.
47. காடுகளின் இயற்கைவளத்தை பாதுகாக்கும் உத்தியோகத்தரை இப்படியும் அழைப்பர்.
55. இதன் இசைக்கு மயங்காத நல்லபாம்பு உண்டோ.
59. இது நீர்த்தேக்கத் தாவரமாகும், இதற்குள் "அல்கா" வகையும் அடங்கும். இது அதன் வழுக்கலால் மாறியுள்ளது.
64. 700 நண்பர்களுடன் தந்தையால் வெருட்டியடிக்கப்பட்ட இவன் தென் இலங்கையின் முதலாவது மன்னனென மகாவம்சம் கூறுகிறது.
71. ஆக்கங்களினதும், உயிரினங்களினதும் ஆரம்ப விளைவுக்கு இதுவே பெயராம்.
77. அன்று அனுமன் பெயர்த்தெடுத்த மலைமூலிகையின் பெயரும், இன்று உங்கள் கையில் தவழும் மலரின் பெயரும் இதுவேயாகும்.

www.tamilarangam.net


கேள்விகள்: "மேலிருந்து கீழ்"

1. அரைக்க மணம் தருவது சந்தனம், ஆனால் புகைந்து மணம் பரப்பும் குச்சி இதுவாகும்.
2. (எதுவித கருத்துமற்றது)
3. இதுவோர் தானியமாகும்.
4. மண்டையோட்டை புறக்காரணிகளிலிருந்து பாதுகாக்க இயற்கையாக அமைந்த இது மிக நீண்டு வளரும்.
6. தென்னிந்திய மன்னனான கட்டப்பொம்மனின் கோட்டை இந்தக் குறிச்சியிற்தான் அமைந்திருந்தது. ஆனால் இங்கு குழம்பியுள்ளது.
7. தற்போதைய டென்மார்க் இளவரசர்களில் ஒருவரின் பெயரே இதுவாகும்.
8. உணர்வுகளுக்கு விருந்தான இது, 64 வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஆனால் இங்கு இது குழம்பல்.
23. தமிழ்ச் சுப வைபவங்களில் இடம்பெறும் இனிய சிற்றுண்டிகளுக்கு சீனியை இப்படியும் பதப்படுத்தி - சுவையூட்டுவர்.
31. "செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான் அல்லிடத்துக் காக்கின் என் காவாக்கால் என்" என்றுகுறள் இதையே கூறியும், குழம்பியுள்ளது.
36. இது இந்தியாவிலுள்ள மாநிலமொன்றின் பெயராகும். இது "ORISSA" மாநிலத்துக்கு அருகிலுள்ளது.
38. இதுவே அயோத்தி மன்னன் சிறீ இராமனின் புதல்வர்களின் பெயர்.
39. கனடா நாட்டு மக்களை இப்படி அழைப்பர்.
44. இரு பொருள்பட கவிபாடுவோரை இப்படி அழைப்பர்.
50. இவரே முல்லைக் கொடிக்கு தேர் ஈய்ந்த வள்ளல். இங்கு இவர் இடம்மாறியுள்ளார்.
55. எப்போதும் கணவனுக்கு துணையாக இருக்கவேண்டிய இவள் இங்கும் குழப்பியுள்ளாள்.

பிறர் உள்ளம் அறிந்து நடப்பது ஓர் அரிய கலை. பெண்ணுக்கு அது கட்டாயம் வேண்டும்.

- மு.வ -

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilsangam.net



# குறுக்கெழுத்துப்போட்டி: 2.

"சஞ்சீவி"யின், மலர் 3 ன், குறுக்கெழுத்துப் போட்டி சம்பந்தமான விடைகளும், சரியான விடைகள் எழுதியவர்களில் பரிசுகள் பெற்றுக்கொண்ட மூவரின் பெயர் விபரங்களும்;




இட-வலம்:
1. தீபம்
5. அமெரிக்கா
10. யவனம்
15. முருங்கி
22. பாக்கு
26. சக
34. சேனை
39. மண்டோதரி
46. பாண்டம்
53. சதி
55. பட்டை
59. உமி
62. பல
64. .....
70. காமம்
74. படுக்கை
79. தும்பு.

மே-கீழ்:
1. தீயணைக்கும் படை
2. பவளம்
6. மெழுகு
7. ரிஷி
9. காமேகன்
13. பாசம்
23. டோலக்
34. சேதி
39. மண்டையோடு(டு)
40. பாண்
42. தருமி
47. பட்டறை (டை)
53. சபலம்
54. திலம்பு
59. உவகை
70. காது.

1. வது

S.Karu, Asagården 9 st.sv, 7500 Holstebro.

2. வது

S.Kugan, Vestergade 37 k 4, 7500 Holstebro.

3. வது

S.Gnanavel, Vestegade 37, 7500 Holstebro.

இதழ் 4, புதிய வடிவ குறுக்கெழுத்துப் போட்டியுடனும். சிந்தைக்கு விருந்தளிக்கும் பல புத்தம் புதிய செய்திகளுடனும், உங்களிடம் தாவி வருகிறது. இதழ் 3ற்கான குறுக்கெழுத்துப்போட்டியில் கூடியவரையில் சரியான பதில் எழுதியவர்களுக்கான 1ம் 2ம், 3ம் பரிசில்கள் யாவும், காலக் கிரமத்தில், பரிசுக் கட்டளைகளாக "சஞ்சீவி"யால் அனுப்பிவைக்கப்படும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Sov sødt og drøm behageligt:

Mange mennesker siger, de ikke kan huske deres drømme næste morgen, eller at de kun kan huske dem det første minut, efter at de er vågnet. Hvis De har et lignende problem, så prøv disse tips.

§1. De kan programmere Dem selv til at huske. sig til Dem selv, før De falder i søvn, at De vil huske alle Deres drømme.

§2. Anbring papir og blyant lige ved sengen. Prøv, når De vågner, at fastholde. Deres søvndrukne tilstand på grænsen til drømmeland. Led i Deres hukommelse efter drømmebillederne, og prøv at få orden på dem. Åbn så langsomt øjnene og skriv ned alt, hvad De kan husk.

§3. Lad vækkeuret ringe ti minutter før normalt. Det kan være, De så vågner midt i en drøm, fordi nattens sidste drøm almindeligvis vil udspille sig, lige før De plejer at vågne.

§4. Prøv, når De en gang har lært at huske Deres drømme, at få både noget sjovt ud af dem og at lære af dem. Kig Deres notater igennem, og prøv at tolke betydningen. I begundelsen er det mulugt, at De ikke kan se nogen mening i, hvak De drømmer, men hvis De arbejder med drømmene i nogen tid, vil De lære at finde meningen med dem.

Prøv først en direkte oversættelse. Hvis De f.eks. har drømt at De er kommet til skade, da Deres bil skred ud, Har De måske i søvne prøvvet at huske Dem selv på at købe nye dæk.

Her er nogle almindelige drømmetyper og eksemler på hvad de kan betyde.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



5. De er kommet for sent til en bus, en flyvemaskine eller et tog. Måske er De bange for, at livet går Dem forbi.

6. Det telefonnummer, De ringer til, er hele tiden optaget. Telefonen ringer, Men der er ingen, der svarer. De banker på en dør men ingen lukker op. Måske er De bekymret over, at De ikke kan trænge igennem til en person der betyder noget for Dem.

7. De befinder Dem på vej, der forsvinder i tågen, el eller på en trappe der øjensynlig ikke fører nogen steder hen. Denne type drøm kan betyde, at De ikke er sikker på hvad De vil have ud af livet.

8. De ser Dem selv gå nøgen gennem en menneske-mæugde. Ubevisdst er De måske bekymret over, at De ër for sårbar.

Drømme fortæller os om nogle grundlæggende behov, ønsker og frygt, som vi ikke er os bevidst. Hvis De lader Deres drømme være vejviser til Deres ønsker og problemer og tager fat på dem, kan De arbejde Dem ud af bekymringer og finde ny livslst.

Fra feeling C 1977 dr. Arthur Ulene (Los Angeles)

( S.T.N.)

---

Den største fejl af alle er, at man ikke er sig nogen fejl bevidst.

---

Livet er som at køre på cykel. Man falder kun, hvis man holder op med at træde i pedalerne.

www.tamilarangam.net

## Røst i ørkenen.

Denne lille lignelse fortælles af en ekspert i uddannelsesspørgsmål:
En mand kom vandrende i ørkenen, da han hørte en stemme, som sagde:
Saml nogle sten op og put dem i den lomme så vil du i morgen både være sorgfuld og glad.

Manden gjorde, som stemmen bød ham, Han bøjede sig og samlede en håndfuld sten op og puttede dem i sin lomme, Næste morgen stak han hånden i lommen og fandt den fuld af diamanter og rubiner og smaragder.

Og han blev både glad og sorgfuld. Glad over, at han haved taget nogensorgfuld over, at han ikke havde taget flere. Og sådan er det også med uddannelse.

( S.T.N.)

## நீண்ட நித்திரை

வடதுருவத்துக்குச் சற்று மேலிருக்கும் யக்கூட்டியாவின் கடுமையான சைபீரிய. பிரதேசத்தில் தங்கம் வெட்டியெடுக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது அதிசய கண்டு பிடிப்பைச் செய்ததாக அந்த சுரங்கப்பணியாட்கள் உரிமை பாராட்டினர். பணிப்பிரதேசமாக துருவப் பகுதியில் முப்பது அடிக்குக் கீழே அவர்கள் ஒரு ட்ரைட்டான் (triton) என்ற உடும்பு வகை விலங்கைக் கண்டு பிடித்தனர். இது நிலத்திலும் நீரிலும் வாழுகின்ற பல்லியினத்துக்கு ஒப்பாயிருந்தது. சுரங்கப் பணியாட்கள் வியப்பில் ஆழ்த்தும் விதமாக, சிற்று நேரம் சூரிய வெளிச்சத்துக்குப் பின் அது தன்னுடைய ஐந்து விரல் கொண்ட கால்களால் அது மெதுவாக நகர்ந்தது.... தன்னுடைய புடைத்த கண்விழிகளை அசைத்துக் கொண்டு, தலையைத் திருப்பியவாறு நகர்ந்தது." என்று டாஸ் செய்தி நிறுவனம் குறிப்பிட்டது. அது ஒரு சில நாட்களுக்குப் பின் இறந்து விட்டது. மரித்தது போன்ற நிலையிலிருந்து திரும்ப உயிர் பெறுதல் (anabiosis)

www.tamilarangam.net


சொல்லப்படும் குறைந்த உயிர்ப்புடைய நிலையில் அப்படிப்பட்ட விலங்கினங்கள் நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கும் ஏன் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கும் உயிர்வாழ்வது கூடிய காரியம் என்று சோவியத் விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

நன்றி- 'விழித்தெழு'

## சற்றுச் சிரிப்போமா?

இரு டெனிஸ் கமக்காரர்கள் தங்கள் வயல் கரையோரப் பாதையில் நின்று உரையாடிக்கொண்டிருக்கையில் அவ்வழியே ஒரு வெளிநாட்டவர் வந்தார். அவர் இவ்விரு கமக்காரர்களையும் பார்த்து கடற்கரைக்குப் போகும் வழியைக் காட்ட முடியுமா?- என்று ஆங்கிலத்தில் கேட்டார்.

அந்தக் கமக்காரர்கள் இருவருக்கும் ஆங்கிலம் தெரியாது. அவர்களுக்கு ஒன்றுமே புரியவில்லை. அவர்கள் "Nej" என்று மட்டும் பதிலளித்தார்கள்.

அந்த வெளிநாட்டவர் ஜேர்மன் பாஷையில் அக்கேள்வியைக் கேட்டார்.
அதற்கும் அவர்கள் "Nej" என்றே பதிலளித்தார்கள்.
பின்னர் ஸ்பானிய மொழியில் கேட்டார்
"Nej" என்றே பதில் வந்தது.
பிரெஞ்சு மொழியிலும் கேட்டுப் பார்த்தார்,
"Nej" என்றே பதில் வந்தது.

அந்த வெளிநாட்டவர் அவ்விடத்தை விட்டு நகர்ந்து போய் விட்டார்.

அந்த இரு கமக்காரர்களில் ஒருவர் மற்றவருக்குச் சொன்னார், நாங்கள் ஏதாவது ஒரு வெளிநாட்டுப் பாஷையைக் கட்டாயமாகப் பழக்க வேண்டும் என்று.
அதற்கு மற்றவர் சொன்னார் "அதெல்லாம் முட்டாள்த்தனமான வேலை; இப்ப பார்த்தாயா அந்த வெளிநாட்டுக்காரனுக்கு நாலு பாஷை தெரிந்திருந்தும் எந்த விதமான பிரியோசனமும் இல்லை."

நீ சொல்வதும் சரிதான் என்று முதலாமவர் பதில் சொன்னார்.-

- வசந் - கொல்ற்றப்புகே

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கொல்ஸ்ரபுரே தமிழ் டனிஷ் நட்புறவுச் சங்கத்தினால் தமிழர்களுக்கான மேசைப் பந்தாட்டப்போட்டி 23.09.89 சனிக் கிழமை நடத்தப்பட்டது.

மேற்படி போட்டியில் முதல் மூன்று இடத்தைப் பெற்றுக் கொண்டவர்களது விபரங்களையும் உங்களுக்கு அறியத்தரு வதில் மகிழ்ச்சியடைகிறோம்.

வெற்றி பெற்ற விளையாட்டு வீரர்களுக்கும் போட்டியில் கலந்துகொண்ட அனைவருக்கும் சங்கம் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவி த்துக் கொள்ளுகிறோம்.

போட்டியில் வெற்றிபெற்ற மூவரது பெயர் விபரங்களை இங்கு தந்துள்ளோம்.

முதலாவது இடத்தைப் பெற்றவர்.

செல்வன். மு. ஸ்ரீதர்
தொஸ்வை 84
7500 கொல்ஸ்ரபுரே.

இரண்டாவது இடத்தைப் பெற்றவர்

செல்வன். பூ. நந்தகுமார்
ரிங்கோடன் 67
7500 கொல்ஸ்ரபுரே.

மூன்றாவது இடத்தைப் பெற்றவர்.

திரு. ஆர். வசந்தகுமார்
7500 கொல்ஸ்ரபுரே.

தமிழ் - டனிஷ் நட்புறவுச் சங்கம்
கொல்ஸ்ரபுரே.

www.tamilarangam.net


# கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி

1. நான்குபேர் கொண்ட சுற்றுப்போட்டி.
2. புதிய முறை ஆட்டம். [SET-UP]

கொல்ஸ்ரபுரோ தமிழ் மன்ற நட்புறவுச் சங்கத்தின் ஆதரவில் டென்மார்க்கில் வதியும் அனைத்துத் தமிழ் மக்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி ஒன்றை 25.11.89 சனிக்கிழமை நடாத்தத் தீர்மானித்துள்ளோம்.

முன்கூட்டியே பதிவு செய்து கொண்ட அனைத்து கழகங்களையும் ஆதரவாளர்களையும் அன்போடு அழைக்கின்றோம்.

போட்டிகளில் கடைப்பிடிக்கவேண்டிய விதிமுறைகள்:-

1. நான்கு பேர் கொண்ட விளையாட்டில் ஒவ்வொரு கழகத்திலிருந்தும் ஆகக் கூடியது மூன்று அணிகள் மட்டும் பங்குபற்றலாம்.
2. செற்-அப் (SET UP) விளையாட்டில் ஒரு கழகத்திலிருந்து ஒரு அணி மட்டுமே பங்குபற்றலாம்.
3. நான்கு பேர் கொண்ட விளையாட்டில் பங்குபெறும் நபர் ஒருவர் செற்-அப் (SET UP) விளையாட்டிலும் பங்குபற்றலாம்.
4. ஒரு குறிப்பிட்ட கழகத்துக்காக விளையாட்டுக்களில் கலந்துகொள்ளும் வீரர்கள் மற்றும் அணியினர் வேறு அணியிலோ அல்லது கழகத்திலோ சேர்ந்து விளையாடுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.

25 11 89

மேற்படி விதிகளுக்கமைய போட்டிகளில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.

நடைபெறும் இச் சுற்றுப் போட்டியை சிறப்பாக நடாத்துவதற்கு அனைவரையும் அழைக்கின்றோம்.

நன்றி.

தமிழ் - கரப்பந்தாட்டக் கழகம்,
கொல்ஸ்ரபுரோ.

www.tamilarangam.net

# Drømmen om dråben i det Indiske Ocean

Jo, jo vist er det forfærdeligt, hvad der for egår på Sri Lanka. Udefra bombarderes jeg med dræbende kendsgerninger, som kræver deres ful de plads i min bevidsthed.

Oplysninger om singalesernes hjerte løse nedslagtning af civile tamiler.

Meddelelser om frihedskæmpernes ben hårde midler til at lede og fastholde deres "eneret" på den tamilske modstand. Ikke mindst overfor deres egne.

Informationer om de udenlandske trop pers grove opførdsel og utroværdige løfter om at skabe fred på øen.

Jo, jo vist er det frofærdellgt.

Men indefra strømmer der et ganske andet billede af Sri Lanka ud og danser for mine lukkede øjne. Det er drømmen om det lille dråbeformede land, som er så langt, langt borte og alligevel så levende i mit hjerte, hvor det bor sammen med en ung mand, der kal- der det sit hjemland.

Jeg kan se det vågnende Sri Lanka i tidligt morgensol, Når min ven søvndrukkent binder sin saram om livet, strækker sig med et selvmedlidende "amma" og går ud til brøn- den for at pumpe køligt vand til sin onkels planter.

Jeg ser fiskerbådene lægge fra land og sejle ud på det blå, blå vand, hvor sumk- ke fisk i mange farver, men også farlige hajer gemmer sig.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


Jeg kan se min vens familie for mine øjne Amma, Abba og de tre søskende. Moderen og de to søstre har deres fine sarier på, fordi de skal fotograferes udenfor det lave, turkisfarvede hus. Herude står den høje banan palme og overalt er der blomster, der står og drømmer om regntiden, som skal komme.

Jeg stjæler mig til et kig ned på stranden, hvor en flok af landsbyens halvvoksne drege sidder og snakker om piger efter en dukkert i det lune hav. Hvor er her dejligt svalt i aftentimerne. Nu kan man gå i sandet uden at det brænder i fødderne.

Drengene konkurrerer om, hvem der kan slå flest smut med de flade sten, indtil de går hjem for at sove.

Sådan er drømmen om dråben i Det indiske Ocean.

Karen Marie Kofoed,
Fredericia.

---

நீ ஏன்-இந்த இளம் வயதிலே-இப்படி ஏக்கம் கொள்-
-ளுகின்றாய்..?
நீ, தன்னறிவு பெற்று, ஆற்றலைப் பெருக்கி, உரிமை-
யோடும், ஒழுங்கோடும் துணிவோடும் நன்கு வாழப்பிற-
-ந்தவன். இதை மறந்து விடாதே!
எங்கே பிறந்தாலும் நீயும் மனிதனாக
தன்மான மனிதனாக, பண்பட்ட மனிதனாக, உரிமையுள்ள
மனிதனாக, பெரும் பொறுப்பு ஏற்கும் மனிதனாக நன்கு வாழ-
-லாம். அது உன் கையில் இருக்கிறது. உன் முயற்சியில் இருக்-
கின்றது. —நன்றி- குமுதம்.

www.tamilarangam.net

# இந்து சமுத்திரத் தீவொன்றின் கனவு

அடடே! இலங்கையில் நடப்பது மிகவும் பயங்கரமாயிருக்கிறதே.

படுகொலைக்கான உண்மைக் குண்டுகளின் சத்தம் எனது காதுகளில் விழுகின்றது. இதனை முழுமையான முறையில் புரிந்து கொள்ள. பூரணத்துவமான மனநிலை தேவையாகின்றதே...

இதயமே இல்லாத சில சிங்களர், அப்பாவித் தமிழர்களைப் படுகொலை செய்யும் செய்திகள்....

இவ் விடுதலைப் போரில், போராளிகள் தமது தலைமைத்துவத்தையும், தனியுரிமையையும் பாதுகாப்பதற்காக, கொடுமையான வழிமுறைகள் கையாளுதல் பற்றிய செய்திகள்.... தங்களுடைய இனத்தைக் கூட விட்டுவைக்கவில்லையே....

வெளிநாட்டுப் படைகளின் கீழ்த்தரமான நடவடிக்கைகளும், தீவில் அமைதியை ஏற்படுத்துமென நம்பமுடியாத சத்தியங்கள் பற்றிய செய்திகளும்....

அடடே இது பெருங் கொடூரமானதே-

ஆனால் நான் கண்தூங்கையில் இலங்கை பற்றி இன்னோர் விதமான கற்பனை என் கண்முன்னே தோன்றுகிறதே....

இது மிகமிகத் தொலைவிலுள்ள அந்தச் சிறு துளியைப் பற்றியதாய் உள்ளதே...

எனது நண்பன் அரைகுறை நித்திரையில் எழுந்து சாரத்தினை இறுகக் கட்டியபடி, உடம்பு முறித்தபடி, தாயை அழைத்துக் கொண்டே கிணற்றடிக்குச் சென்று, மாமனாரின் தோட்டத்துக்கு அதிகாலை வெயிலில் குளிர்ந்த நீரைப் பாய்ச்சுவதை என்னால் பார்க்கக் கூடியதாயுள்ளது.

www.tamilarangam.net


கடற்கரைத் தரையிலிருந்து படகுகளை அந்த நீலநிற நீருக்குள் இழுத்துவிடுவதை என்னால் பார்க்கக் கூடியதாகவுள்ளது. இந்நீரில் எத்தனை வகையான வண்ண வண்ணமீன்களும், அதேவேளை ஆபத்தான சுறாக்களும் மறைந்துதான் இருக்கின்றனவே...

என் நண்பனின் குடும்பத்தினை எனது கண்களாற் பார்க்கக் கூடியதாகவுள்ளது. அங்கே அம்மா, அப்பா, சகோதரர்களும் நிற்கிறார்கள். அந்தத் தாயும் இரண்டு பிள்ளைகளும் அழகான சேலை கட்டியிருப்பது தெரிகின்றது. ஏனெனில் அவர்கள் வீட்டுக்கு வெளியே நின்று புகைப்படம் பிடிக்கவுள்ளார்களாம். அங்கே எல்லா இடங்களிலும் வாழைகளும், பூ மரங்களும் மழைகாலத்தினை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றன.

நான் கடற்குளித்துவிட்டு மகிழ்வுடன் வரும் போது இளம் பெண்கள் பற்றி வர்ணித்துக் கொண்டிருக்கும் சில வாலிபர்களை ஒளிந்துநின்று பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

இந்த இனிய மாலைப் பொழுதில் சூரியக்கனல் குறைந்திருப்பதால் என்னால் மணலில் இதமாக கால் பதித்து நடக்கமுடிகிறது. அந்த இளஞ் சூட்டில் எவ்வளவு இதமாக இருக்கிறது.

அந்த கரையோர கூழாங்கற்களை எடுத்து தமது இளமை நேரத்தை இனிமையாக போக்கிக் கொள்வதற்காக கடல் நீரின் மீது மிதப்பாக எறிந்து அது எத்தனைதடவைகள் எம்பிப் பாய்ந்து நீரில் மூழ்குகின்றது என்ற அழகினை இந்த இளம் பிஞ்சுச் சிறார்கள் சித்திராதேவி அழைக்கும்வரை தொடர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

— காஸன் மலியா.
(பெறடேனியா)
மொழிபெயர்ப்பு: எஸ்.பி.எம்.

---

வெற்றி என்பது தொண்ணூற்றெட்டு சதவிகிதம் வியர்வை சிந்தும் உழைப்பு, இரண்டு சதவிகிதம் காரியத்தை முடிக்க வேண்டும் என்ற ஊக்கம், ஒருவனுக்கு கிடைக்கும் புகழ் செல்வம், மதிப்பு போன்றவைகள் அவனுடைய புத்திசாலித்தனமான உழைப்பைப் பொறுத்துத்தான் அமையும். - நன்றி - குமுதம் -

www.tamilarangam.net



# சிறுவர் அங்கம்

## செல்வக் கண்ணே..

சின்னக் கண்ணே, செல்வக் கண்ணே
சேதி சொல்வேன் கேள்
உள்ளம் மகிழ உண்மை தெரிய
சேதி சொல்வேன் கேள்
அன்பும் வேண்டும் அறனும் வேண்டும்
செல்வக் கண்ணே கேள்
அறிஞர் வாக்கைப் போற்றவேண்டும்
அன்புக் கண்ணே கேள்
கண்ணியமாகப் பெரியோரை
மதிக்க வேண்டும் கேள்
உனக்கும் நீயே உண்மை
சொல்லிப் பழகவேண்டும் கேள்
ஒற்றுமை வளர்ந்திட - உனது
செயலும் இருக்கவேண்டும் கேள்
உலகம் போற்ற, உலகை பெருக
நடக்க வேண்டும் கேள்
உன் தாய் தந்தையுள்ளம்
உனது பிறப்பால் மகிழவேண்டும் கேள்
சின்னக்கண்ணே செல்வக் கண்ணே
சேதி சொல்வேன் கேள்
உள்ளம் மகிழ உண்மை தெரிய
சேதி சொல்வேன் கேள்.

ஜெனிமாலா

www.tamilarangam.net

அன்பிற்கினிய சிறார்களே;

"சஞ்சீவி" மேலும் உங்கள் அறிவுத்திறனைப் பெருக்க 10, பொது அறிவுக் கேள்விகளைச் சுமந்து கொண்டு உங்களிடத்தில் வருகிறது. இதோ:-

1. றேடியம் என்ற பொருளைக் கண்டுபிடித்த விஞ்ஞானியின் பெயர் என்ன?
2. உலகத்திலுள்ள உயிர்வாழ்வனவில் மிகவும் பெரிய விலங்கினம் எது?
3. உலகின் மிகப் பெரிய தீவு என எந்த நாட்டை கூறுவர்?
4. உலகின் மிகபெரிய நாடு எதுவாகும்?
5. பூமிக்கும் ஒளியைக் கொடுக்கும் சூரியக்கோளத்தின் வெப்பநிலை எவ்வளவு?
6. பறவையினங்களில் மிகப் பெரிய பறவை இனம் எது?
7. மோட்டார் வாகனத்தை முதல்தடவையாகக் கண்டுபிடித்தவர் யார்?
8. பறவையினங்களில் அதிவேகமாக பறக்கும் இனம் எதுவாகும்?
9. புவியீர்ப்புச் சக்தியைக் கண்டுபிடித்து உலகிற்கு விளங்க வைத்தவர் யார்?
10. தொலைபேசியை (T. PHON) கண்டுபிடித்து உலகிற்குத் தந்த விஞ்ஞானியின் பெயர் என்ன?

பெற்றோரின் கவனத்துக்கு!

சிறுவர்களை ஊக்குவிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு சிறுவருக்கான நிகழ்ச்சிகளை எழுதிவருகிறோம். ஆனால் சிறுவர்து பங்களிப்புக்கள் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது வருத்தத்துக்குரியதாகும்.

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை ஊக்குவிப்பதன் மூலம் அவர்களை இவ்வகையான நிகழ்ச்சிகளில் பங்குபற்றச் செய்வதால் பிள்ளைகளின் எதிர்காலம் நல்லபடி அமைய வழிசெய்யலாம்...

இதுவே பெற்றோரது கடமையுமாகும்.

www.tamilarangam.net


# பேராசை

கதை சித்துமணி

ஓவியம் உதயன்



அல்லைப்பிட்டி கிராமம் அது. அங்கு அலையலை யாகத் திரண்டு கிடக்கும் வெண்மணற் வெளியல். அதில் ஒய்யாரமாக உயர்ந்திருக்கும் கற்பகப் பிள்ளையார் கோவில். . ஏழைகளின் பாத்திரமான அக் கோவில் பிள்ளையாரை சர்மா என்ற ஐயர் கழுவித் துடைத்து பூமாலை சூட்டி பூசித்து பூசைகள் செய்து வந்தார். என்றும் போல ஒருநாள் கோவிலைக் கூட்டி துப்பரவு செய்து, பிள்ளையாரை கழுவித் துடைத்து பட்டுவேட்டி புத்தம் புது மல்லிகை மலர்களை மாலையாகத் தொடுத்து அதை அவருக்கு அணிவித்து பாலாபிஷேகம் செய்து தன் மனதுக்குள் அடக்கி வைத்திருந்த மனக் குமுறலை வாய விட்டு, பிள்ளையாரப்பா! இன்றல்ல நேற்றல்ல கிட்டத் தட்ட பதினைந்து வருடம் உன் திருவடியே சரணம் என்று நம்பியிருக்கும் என்னை

www.tamilarangam.net

ஏன் சோதிக்கிறாய். ஏழ்மையில் இன்றுவரை காலத்தை ஓட்டி வரும் எனக்கு உன் நல்லாசி எப்போது கிடைக்கப் போகிறது. மற்றவர்களைப் போல என்னை ஒரு பெரிய பணக்காரனாக நீர் ஆக்காது போனாலும் இந்த ஏழ்மையிலிருந்து விடுபட நல்லருள் புரியப்பா என்று வேண்டிக் கொண்டார்.



புலிகேசி அந்த வட்டாரத்திலேயே மிகப் பெரிய பணக்காரர். ஆள், அம்பு, சேனை என்று சொல்வார்களே அத்தனை சுக சௌகரியங்கள் ஒன்றேனும் குறைவின்றி வாழ்பவர். புலிகேசியார் இக் கோவிலுக்கு வெள்ளிக்கிழமை வெள்ளிக்கிழமை தவறாது வலம் வந்து உடுத்தியிருக்கும் உடைகள் அழுங்காமல் நலுங்காமல் நின்று வணங்கி ஆசி பெற்றுப் போவார்.

ஒருநாள் இவர் என்றும் போல பிள்ளையாரை தரிசிப்பதற்காக கோவில் அண்டை வந்து பிள்ளையார் அப்பனே! என் செல்வச் செருக்கு சொல்லிக் கொள்ளும் அளவிற்கு இருந்தாலும் எப்ப உன்காலடி வந்து சரணம் என்று கும்பிட்டேனோ அன்றிலிருந்து பலமடங்கு பெருகிக் கொண்டே வரும் என் செல்வம் மேலும் பெருக நீதான் அருள் புரிய வேண்டும் என வேண்டி நின்றார்.

இதைப் பார்த்த பிள்ளையாரின் தம்பி முருகனுக்கு உள்ளூரப் புகைச்சல். தனது அண்ணன் தொடர்ந்தும் ஐயரை ஏழையாக்கி வைப்பதையும்

www.tamilarangam.net


புலிகேசியரை மேலும் மேலும் பணம் படைத்தவராக ஆக்கி வருவதையும் பார்க்க அவருக்கு கோபம் கோபமாக வந்தது. என்ன தான் அண்ணனுக்கு இருந்தாலும் இவர் விஷயத்திலும் ஏன் இந்த ஓரவஞ்சனையாக நடந்து கொள்கிறார். அதுபற்றி தமையனிடம் கேட்டே விட்டார்.



என் அருமை அண்ணா அவர்களே, உம்மால் எழுந்த சுருசுருப்பாக ஒரு அடியும் பார்க்க முடியாவிடினும் உன்னைத் தேடி வருபவர்களுக்காகவென்றும் நீர் உண்மையாக நடந்து கொள்ள வேண்டாமா. பாவம் ஐயர் சர்மா எவ்வளவு காலமாக உன்னைக் கழுவுகிறார், துடைக்கிறார். பூமாலை சூட்டி தீபம் காட்டி புரண்டு உருண்டு சைவ அனுட்டானம் சற்றேனும் குறையாமல் உன்னை கும்பிட்டு வருகிறார். அவரை இன்றைக்கும் ஏழையாகவே வைத்திருக்கிறாய். இது நியாயமா? புலிகேசியரைப் பார் எவ்வளவு பணக்காரன் கிழமையில் ஒரு நாள் பட்டும் பட்டாடையுமாய் பவுண் நகைகளை உடம்பெல்லாம் தொங்கவிட்டு அழுங்காமல் நலுங்காமல் நாகரீக கும்பிடு போடுகிறான். நீங்களும் போய் அவனுக்கே பணத்தையும் பதவியும் அள்ளிக் கொடுக்கிறீர்கள். எனக்குக் கண்டால் பிடிக்கேல்லை.

முருகன் சொன்னவற்றைக் கேட்ட பிள்ளையார், தம்பி! நீ குறை சொல்லிப் போட்டாய். இருந்து பார் நான் என்ன செய்கிறேனென்டு.

சில நாட்கள் ஓடி மறைந்து விட்டன. புலிகேசியர் ஏதோ வியாபார விடயமாக தனக்கு மேலும்

www.tamilarangam.net


லாபம் கிடைக்க வேண்டுமென வேண்டுதல் செய்ய கோயிலுக்கு வந்தார். இது சமயம் பார்த்த பிள்ளையார் தன் தம்பி முருகனை கூப்பிட்டு சுகம் விசாரித்தார். முருகன் தான் நலமாய் இருப்பதாயும், என்றைக்கும் இல்லாமல் இன்று ஏன் சுகம் விசாரிக்கிறாய் என்று கேட்டார். அதற்குப் பிள்ளையார், அண்டைக்கு சர்மா ஐயர் விசயமாய் என்னைக் குறை சொல்லிப் போட்டாய். நானும் நல்லா யோசித்துப் பார்த்தேன். ஐயர் மேல் எனக்குப் பரிதாபமாய்க் கிடக்கு, எதுக்கும் புதன் கிழமை அவருக்கு ஐயாயிரம் ரூபா கொடுக்கலாம் என்று முடிவு செய்திருக்கிறேன். அதைக் கேட்ட முருகன் மிகவும் சந்தோசப்பட்டு, அப்படியா கேட்க மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது.



பிள்ளையாரும், முருகனும் பணம் சம்பந்தமாக கதைக்கிறதும் அதில் சர்மா ஐயரின் பெயர் அடிபடுவதையும் வேண்டுதலுக்கு வந்த புலிகேசியார் காதுகளில் தெளிவாகக் கேட்டது.

அண்ணனும் தம்பியும் ஐயருக்கு புதன் கிழமை ஐயாயிரம் ரூபா கொடுக்கப் போகினம். கடவுளாச்சே, ஒண்டு முடிவு எடுத்தினமெண்டால் நாளை தப்பாமல் கொடுத்தே விடுவினம், இதை எப்படியும் தான் அடைந்து விட வேணும் என்று பேராசைப்பட்டார். உடனே தன் காரிலை ஏறி ஐயர் வீடு போய்ச் சேர்ந்தார்.

திடீரென தன் வீட்டின் முன்னே ஓர் அழகான கார் வந்து நிற்பதையும் அதிலிருந்து புலிகேசியார் இறங்கி வருவதையும் கண்ட ஐயருக்கு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆச்சரியம் தாங்க முடியவில்லை. ஓடிச் சென்று முகஸ்துதி செய்து வாரும் புலிகேசியார் என முகம் மலர வரவேற்றார். புலிகேசியாருக்கு ஐயரைக் கண்டதும் மிகவும் சந்தோஷம்.



எந்த விதமான பேச்சுமின்றி ஆயிரம் ரூபா அடங்கிய பணக் கட்டு ஒன்றை ஐயரது கைக்குள் திணித்து, ஆச்சரியப் படாதையும் பிடியும் இது உமக்குத் தான் வைத்துக் கொள்ளும் எனப் பிடிவாதமாய்ப் பிடித்துக் கொடுத்தார்.

பணத்தை இருகைகளாலும் வேண்டிக் கொண்ட ஐயரும், உமக்கு வீட்டில் ஏதும் தீட்டுத் துடக்கு நீக்க வேண்டுமோ, கலியாண காரியம் செய்து வைக்க வேண்டுமோ என பல கேள்விகளைக் கேட்டார். அதற்கு புலிகேசியாரும், அதெல்லாம் ஒன்றுமில்லை, எல்லாம் திருப்தியாய்த் தான். நான் சொல்லுறதைக் கவனமாய்க் கேளும் காணும். வருகிற புதன் கிழமை உமக்கு என்ன கிடைக்கிறதோ அதையெல்லாத்தையும் என்னட்டை தந்து விட வேணும். அதற்கு உபகாரமாய் நான் இந்த ஆயிரம் ரூபாவையும் உமக்குத் தருகிறேன்.

ஐயருக்கு ஒரே வியப்பாய் இருந்தது. கையில் கிடைத்த ஆயிரம் ரூபாவைக் கைவிட அவருக்கு மனம் வரவில்லை. புதன் கிழமை அப்படி என்ன தான் கிடைத்து விடப் போகிறது. மிஞ்சி மிஞ்சி மிஞ்சி மிஞ்சி கொஞ்சம் காய் பிஞ்சும் அரிசியும் கிடைச்சதில்லை. இதுக்கேன் இந்த மனுசன்

www.tamilarangam.net

ஆசைப்படுகிறார். சரி என்ன தான் நடக்குதென்டு பார்ப்பம். புதன் கிழமை என்ன கிடைக்குதோ அதை அப்படியே கொண்டு வந்து தாறன். திருப்திதானே?

புலிகேசியாருக்கு ஐயரின் வாக்கில் மிகுந்த நம்பிக்கை இருந்தது. ஆயிரம் ரூபாவை விட்டு நாலாயிரம் ரூபாவைப் பிடிக்கப் போகும் தனது தந்திரத்தை நினைத்துக் கொண்டே புலிகேசியார் வீடு போய்ச் சேர்ந்தார்.

புதன் கிழமையும் வந்தது. அதிகாலையே புலிகேசியார் ஐயர் வீடு வந்து அன்று புதன் கிழமையென்று ஞாபகப் படுத்தியதுடன் ஐயரை நீராடவைத்து புதுத்துணி கட்டுவித்துத் தனது குலதெய்வமான பிள்ளையாரை வணங்கச் செய்து வீதியால் நடந்து திரியும் படியும் மூட்டை முடிச்சு ஏதாவது தட்டுப்பட்டால் அதை எடுத்து வரும் படியும் கூறினார்.

அன்று முழுவதும் வீதி வீதியாக ஐயரை அலைந்து நடந்து திரியும் படி கட்டளை இட்டார்.



ஆயிரம் ரூபாவை ஐயர் கைநீட்டி வாங்கி விட்டதால் புலிகேசியர் சொல்வதற்கெல்லாம் பம்பரமாய்ச் சுழன்றார்.

அன்று ஐயர் போய் வராத வீதிகள் இல்லை. தெரிந்த முகங்கள் கூட இவரைப் பார்த்தும் பார்க்காதது போல முகத்தை மறுபக்கம் திருப்பியபடி சென்றார்கள். வழமை போல கிடைக்கும் பண்ட பாத்திரங்கள் கூட கிடைக்க வில்லை. திரும்பிய இடம் எல்லாம் ஏமாற்றம்.

நெடு நேரம் நடந்ததால் கால்கள் சோர்வடைந்து தள்ளாட பொழுதும்

www.tamilarangam.net

இருட்டி விட்டதால் சலிப்படைந்த மனதுடன் வீடு வந்து சேர்ந்தார்.

ஐயரின் வரவிற்காக ஆவலோடு காத்திருந்த புலிகேசியார் ஐயர் வெறும் கையோடு வந்ததைக் கண்டு பதறியபடி ஓடிச் சென்று என்ன காணும் வெறும் கையோடு வருகிறீர், மூட்டை முடிச்சு ஒண்டும் அம்பிடேல்லியோ என்று கேட்டார்.

வெகு தூரம் நடந்த களைப்பும் புலிகேசியாருடைய கேள்வியும் ஐயருக்கு எரிச்சலை மூட்டியது. மூட்டையோ முடிச்சோ தட்டுப்படும் தூக்கியா எண்டியள் என்றை காலில் ரத்தம் வந்தது தான் மிச்சம் நான் ஏழையாக இருக்கிறது உமக்குப் பகிடியாக இருக்கிறதோ என புலிகேசியார் மீது ஐயர் எரிந்து விழுந்தார்.

ஏமாற்றத்தைத் தாங்கிக் கொள்ள முடியாமல் புலிகேசியார் அவ்விடத்தை விட்டு அகன்று நேரே பிள்ளையார் கோவிலுக்கு வந்தார். இரண்டு கடவுள்களும் பொய் பேசிப் போட்டுதுகள். யானை மாதிரி வயிற்றை வைச்சுக் கொண்டு, பிள்ளையார் ஏமாத்தி விட்டிட்டார். பொய் சொன்னதுக்கு அபித்திடு. குறைஞ்சது பத்துக் குட்டாவது குட்ட வேணும். ஆவேசத்தோடு பிள்ளையாருக்குக் குட்டப் போனார். சமயம் பார்த்து பிள்ளையார் புலிகேசியாரின் தாடியைப் பற்றிப் பிடித்துக் கொண்டார். பிடி இறுக விழிகள் பிதுங்க புலிகேசியார் ஐயோ முறையோ என்று கத்த ஆரம்பித்தார். அப்போது தான் அவருக்குப் புலப்பட்டது தான் முட்டாள் தனமாக வந்து மாட்டுப்பட்டனென்று. பிள்ளையாரது இரும்புப் பிடியில் இருந்து விடுபட முடியாமல் திணறினார். இறுதியில், தயவு செய்து தன்னை விட்டு விடும்படி பிள்ளையாரை மன்றாடினார்.

பிள்ளையாரும் கனத்த குரலில், "நான் உன்னை விடுவதென்றால் எனக்கு நீ நாலாயிரம் ரூபா தந்தாக வேணும். அதுவும், உடனே அந்தக் காசை சர்மா ஐயரிடம் நேரே கொடுத்தும் விட வேணும். இல்லாட்டி பிடி இன்னும் இறுகும்.

பிள்ளையாருடைய தந்திரம் புலிகேசியாருக்கு விளங்கி விட்டது. தன் மூலம் தான் ஐயருக்கு பிள்ளையார் காசு கொடுக்கத் திட்டம் போட்டிட்டார். முற்பணமாக

www.tamilarangam.net



ஆயிரம் ரூபாவையும் என்னைக் கொண்டு திருடப் பண்ணிப் போட்டார். இனி மாட்டனென்றால் விடவா போறீர்....

பிள்ளையாரே! பிடியை விடும். இப்பவே ஐயருக்கு காசைக் கொடுக்கிறேன்.

பிள்ளையாரின் பிடியிலிருந்து விடுபட்ட புலிகேசியார் தனக்கு நடந்த இப்பிச கேட்டை யாருக்கும் சொல்லாமல் நேரே ஐயர் வீடு சென்று அவர் வேண்டாம், வேண்டாம் என்று மறுத்தும் நாலாயிரத்தையும் ஐயருடைய கையிலே திணித்து விட்டு காற்றாய்ப் பறந்து விட்டார். ஐயருக்கு ஒரே வியப்பு எல்லாம் என் பிள்ளையார் அப்பனின் தயவு தான் என்று எண்ணிக் கொண்டார்.

முருகனுக்கு நடந்த யாவற்றையும் பார்க்க சிரிப்பாய் இருந்தது. பிள்ளையாரைப் பார்த்து, அண்ண உண்மையிலேயே உன்னைப் பாராட்டலாம். பாவம் புலிகேசியார்.

உன் அண்ணன் பிள்ளையாரைப் பற்றி என்ன நினைச்சாய். ஆசை இருக்கலாம் பேராசை இருக்கப்படாது கண்டியோ.

பேராசைப் படுபவர்களுக்கு இது நல்ல பாடம். இருவரும் கலகலப்பாகச் சிரித்துக் கொண்டனர்.

(முற்றும்)

www.tamilarangam.net



# குறை கூறும் பழக்கத்தை மாற்றுவோம்...

தமிழ் சமுதாயத்தைப் பீடித்திருக்கும் பல் வேறுவிதமான கொடிய நோய்களுள் ஒன்று மற்றவர்களைக் குறைகூறும் பழக்கமாகும். இப்பழக்கமானது நம் சமுதாயத்தின் மொத்த வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் தடையாக இருந்து வருகிறது என்பதை நாம் காணக்கூடியதாகவுள்ளது.

நமது சமுதாயம் வளர்ச்சிப் பாதையில் துரிதமாகக் கால் ஊன்றிச் செல்ல வேண்டுமாயின் அங்கே காணப்படுகின்ற ஒவ்வாத பழக்க வழக்கங்களை மாற்றிக் கொள்ள முயற்சிக்க வேண்டும்.

இப்பழக்கமானது சிறுவர் முதல் பெரியோர் வரை காணப்படுகிறது என்று கூறலாம்.

நாம் எம்மத்தியில் நல்லகாரியங்களில் ஈடுபட்டு உழைத்து வருகின்றவர்களிடையே ஒவ்வொருவரையும் அவர்களின் செயல்களில் - நடத்தையில் - பேச்சுக்களில் குற்றம் குறைகளைக் கண்டு, அவற்றினை விமர்சனம் செய்து கொள்ளப் பழகிவிட்டோம்.

கிராமத்தின் வளர்ச்சியில் அபிவிருத்தியில் ஆர்வம் கொண்டு செயல்பட்டுவரும் கிராமியத் தலைவர்கள் - முன்னோடிகளின் செயல்பாடுகளில் சிறு குற்றம் குறைகண்டு, பேசி அவர்களின் ஆக்கப் பணிக்குத் தடைகளை ஏற்படுத்திக் கொள்ளுகின்றனர் சமுதாயத்தில் ஒருவகையினர்.

அத்தோடு மட்டுமல்லாது, குற்றம் குறைகூறும் பழக்கம் சமுதாயத்தில் பல மட்டத்திலும் நடைமுறையிலிருப்பதைப் பரவலாகக் காண்கிறோம்.

மாணவன் ஆசிரியரில் குற்றம் காண்கிறான்! ஆசிரியர் அதிபரில் குற்றம் காண்கிறார்! அதிபர் மேலதிகாரியில் குற்றம் காண்கிறார்! மேலதிகாரி அமைச்சரில் குற்றம் காண்கிறார். இவ்வாறே சமூகத்தின் ஒவ்வொரு அமைப்பிலும், இப் பழக்கமானது காணப்

www.tamilarangam.net

தொடர் போல தொடர்ந்து கொள்ளுகிறது.

இவ்வகைப்பட்ட பழக்கம் நம் சமுதாயத்தின் உயர்ச்சிக்கு ஏற்றதா? என்ற வினாவுக்கு விடை காண வேண்டியது மிகவும் அவசியமான பணியாகும்.

ஏன் இவ்வாறான பழக்கம் நம் சமூகத்தில் தொடர்கின்றது? இதை நம்மால் மாற்றிக் கொள்ள முடியுமா? என அவசியம் ஆராயப்பட வேண்டிய விடயமாகும்

சமுதாயப் பணிகளாயினும் சரி, குடும்பப் பணிகளாயினும் சரி, மனிதன் ஆற்றுகின்ற பணிகளை மற்றையவர்கள் விரும்ப வேண்டும் - பாராட்டப்பட வேண்டும் - ஊக்குவிக்க வேண்டும் - புகழ வேண்டும் என எதிர்பார்ப்பது மனித இயல்பாகும்.

நம்மிடம் தாழ்வு மனப்பான்மை நிரம்பி இருப்பதன் காரணமாகத்தான் நாம், மற்றவர்களின் குற்றம் குறைகளைப் பெரிதாக்கிப் பார்த்துக் கொள்ளுகிறோம்.

மற்றவர்களிடம் என்ன குற்றம் குறைகளைக் காணலாம்? என நாம் சிந்தித்து எம் பெறுமதி மிக்க நேரங்களை வீணாகச் செலவிடுகின்ற வேளையில், எம்மைகளை எம் இதயத்தில் வைத்து நான் குற்றம் குறையில்லாத மனிதனா? எனப் பரிசோதனை செய்து பார்ப்பது நல்லதாகும்.

உலகில் இருக்கும் ஏனைய வளர்ச்சியடைந்த சமுதாயங்கள் வெற்றிப்பாதைகளில் விறுநடைபோட்டு முன்னேறிச் சென்றுகொண்டிருக்கின்றன. ஆனால் நாமோ இன்னமும் வாழ்க்கை என்னும் ஓட்டப் போட்டியில் ஆரம்பத்திலேயே இருக்கிறோம். ஆயினும் நாம் முன்னேறிக் கொள்கின்றோம் என்னும் எண்ணத்தில் நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளப் பழகிவிட்டோம்.

மற்றவர்கள் மீது குற்றம் குறைகாணும் பணிதான் உலகில் மிக இலகுவான பணியாகும். அதனைத்தான் மிகப்பெரிய பணியாகக் கருதி நம்மவர்கள் செய்யப் பழகிக் கொண்டார்களோ என எண்ணத் தோன்றுகிறது.

குற்றம் குறை கூறுவதால் நாம் சாதித்துவிடப் போவது எதுவுமில்லை. எனவே இப் பழக்கங்களை நாம் எம் சமுதாயத்தில் மாற்றிக்கொண்டு செயல் படுவதுதான் நமக்கு தேவையானது எனக் கருதிச் செயல்படுவோம். சமுதாயத்தை வளம்படுத்துவோம்.

குணம் நாடி குற்றமும் நாடி அவற்றுள் மிகை நாடி மிக்க கொளல் என்னும் வள்ளுவர் கூற்றுக்கு அமைய குணத்தைப் போற்றி குற்றத்தை எடுத்துக்காட்ட வேண்டிய இடத்தில் எடுத்துக் காட்டுதல் ஏற்புடையது என்பதே எம் கருத்தாகும்.

நன்றி: அறுவழி.

www.tamilarangam.net

# வாசகர் அரங்கம்



திரு. சி. சௌந்தர்.
KOLDING.

அன்புடன் ஆசிரியர் அவர்கட்கு!

தங்கள் கன்னி வெளியீடான 'சஞ்சீவி' வாசித்தேன். தங்களது நல்ல முயற்சிக்கு எனது வாழ்த்துக்கள்.

இதழில் பல நல்ல விடயங்களும், சில சுமாரான விடயங்களும் உள்ளன. அநேகமானவை எழுதியவர்களது சொந்த ஆக்கங்களாக இருந்தமை மிகச் சிறப்பு.

சொந்தமாக எழுதுபவர்கட்கு முக்கியத்துவம் கொடுப்பது மிகவும் நல்லது. இனி நீங்கள் தொடர்ந்தும் கடைப்பிடிக்க வேண்டும் என்பதும், புதிய எழுத்தாளர்களை உருவாக்க 'சஞ்சீவி' இடம் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இன்று தமிழ் மக்களை ஒன்றிணைப்பது மிகவும் முக்கிய கடமை. மேலும் தங்கள் ஆசிரியர் கன்றுரைக்கும், அட்டைப்படத்திற்கும் முரண்பாடு உண்டு. இவைபோன்ற தவறுகளைக் களைந்து தொடர்ந்து தங்கள் சஞ்சிகை வெளிவர என்னால் முடிந்ததைச் செய்வேன்.

சஞ்சிகை அட்டை மிகவும் சிறப்பாக உள்ளது.

திரு. R. கிருதரன்.
NYKØBING.

அன்பான சஞ்சீவிக்கு எனது மனமார்ந்த நன்றி.

வேற்றுமொழிகள் பேசும் இந்நாட்டில் தமிழ் மொழியை மதித்து 'சஞ்சீவி' போன்ற தமிழ் மலர்கள் மூலம் தமிழ் மொழியையும் தொடர்வித்தமைக்காக என் நன்றிகள்.

டென்மார்க்கில் தமிழை மறவாமல் தமிழ் மொழியில் புத்தகங்களை வெளியிடும் ஆற்றல் படைத்தவர்கள் இருப்பதை எண்ணி மிகவும் சந்தோஷம் அடைகிறேன்.

உங்கள் முயற்சி மேன்மேலும் வளர்ச்சியடைய வேண்டுமென்பதே என் ஆசை - பேராசையும் கூட.

தமிழ் எங்கு தொலைவில் பட்டாலும் தமிழைக் கொலைப்பவர்களைத் தொலைக்கிறேன். - தொலைப்பேன்.

'சஞ்சீவி' வெளியீடு அருகிதாக அமையாமல் அன்றடனாக அமைய வேண்டுமென வேண்டுகிறேன்.

உங்கள் அனுமதி கிடைத்தால் எனது ஆக்கங்களை அனுப்பி வைப்பேன்.

—.

www.tamilarangam.net


# சிரிக்கச் சிந்திக்க

## இதை எப்படிச் சொல்லலாம்....?

வழமைக்கு மாறாக எரிக் மிகவும் சந்தோசமாகக் காணப்பட்டார். பழமையை விட வழமைக்கு மாறாக மிகவும் குதூகலமாகவும் சுறுசுறுப்பாகவும் காணப்பட்டார். எனக்கு ஒன்றுமே புரியாமல் இருந்தது. வழமைக்கு மாறாக வீடு கூட சுத்தமாகவும் அலங்காரமாக அழகாக இருந்தது. அந்த நீண்ட மேசையில் பாத்திரங்கள் பல பவுத்திரமாய் அடுக்கி வைக்கப்பட்டிருந்தது. ஆங்காங்கே சில வடிவமையான பல மெழுகுதிரிகள் ஒளிபரப்பிக் கொண்டிருந்தது.

எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. ஏன் இந்த ஏற்பாடுகள் யார் இங்கே விருந்தாளிகள்.

"எரிக் ஏன் இன்று என்னை இங்கு அழைத்தாய்" இது தான் எனது நீண்ட நேரக் கேள்வி. 'உனக்கு இன்று ஒரு ஆச்சரியம் காத்திருக்கின்றது, ஏன் இப்போது அவசரப்படுகின்றாய்... என்று புன்னகைத்தார் எரிக். எனக்கு மிகவும் ஆவலாயிருந்தது.

எரிக் எப்போதும் இப்படித்தான். எல்லாவற்றிலும் இப்படித்தான். எனக்கும் எரிக்குக்கும் நீண்ட கால சிநேகிதம். சாதாரணமாக மொழிப்பாடசாலைக்கு ஆசிரியராக வந்தவர் மொழியை விட எனக்குப் பல விடயங்களிலும் ஆசிரியராக விளங்கினார். அவர் என்னைப் பொறுத்தவரையில் எல்லோரிலும் பார்க்க சில விடயங்களிலும் வித்தியாசமாகவே தென்பட்டார். மொழிப்பாடசாலை எப்போதோ முடிந்து போனாலும் எங்கள் இருவரது சிநேகம் இப்போதும் நிலைத்திருக்கின்றது.

ஏறக்குறைய சென்ற ஒரு வருடமளவில் அவரது வாழ்வில் பல பல மாற்றங்களைக் என்னால் காணக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கூடியதாக இருந்தது. போனவருடம் தான் எரிக்கும் மரியாவும் விவாகரத்துப் பண்ணியிருந்தார்கள். மரியா--வின் பிரிவு தான் எரிக்குக்குப் பல ஏற்படுத்தியிருக்--கின்றது என்பது எனது கணிப்பு, ஓரளவு உண்மையும் கூட.

ஆனால் அந்த எரிக் இன்று பழையது போலவே குதூகலமாகவும் சுறுசுறுப்பாக இருப்பது எனக்கு ஆனந்தமாகவும் ஆச்சரியமாகவும் இருந்தது.

"ஆக்கள் வர இன்னும் கொஞ்ச நேரம் தான் இருக்கின்றது. எனக்கு முடிந்தால் உதவி செய் என்று என்னைத் துரிதப் படுத்தினான், எரிக்

என் இதயத்தில் ஒரு சிறு சந்தோசம், எனது கேள்விக்கும், எனது ஆவலுக்கும் ஓரளவு பதில் கிடைத்தது மாதிரி. "யார் தான்-இங்கு புதிதாய் வரப்போகின்றார்கள்" எரிக்கைப் பார்த்து வினவினேன். அவர் சிரித்தபடியே..... அது சரி நீ ஏன் அவசரப்படுகின்றாய், கொஞ்சம் பொறுத்திருந்து தான் பாரேன், யார் வருகினம் என்று"... எரிக் பதிலளித்தான்.

எனக்குப் பழைய படி ஏதோ போலாகிவிட்டது. எரிக் இப்படி நடந்து கொள்வது எனது ஆவலை மேலும் வலுப்படுத்தியது. அத்தோடு உடனே அறிந்து கொள்ள முடியவில்லையே எனக் கவலையாகவும் இருந்தது.

"ஏன் ஏதோ கடுமையாய் யோ--சிக்கின்றாய்" என்றார் எரிக். நான் ஒன்றும் பேசாது நிலைத்து நின்றேன். எனது நிலையை உணர்ந்து கொண்ட எரிக் "இன்றைக்கு மரியாவும் அவளது புதிய நண்ப--னும் வருகின்றார்கள். அதுதான் இந்த ஏற்பாடுகள் ஆர--வாரங்கள் எல்லாம்" என்றார்

எனக்குத் தலையே சுற்றுவது போலிருந்தது. "என்ன....? மரியா வருவதற்காகவா அதுவும் இன்னொருத்தரோடு வருவதற்காகவா.... அவள் தான் என்னிடமிருந்து பிரிந்து போனவள் என்று - அடிக்கடி சொல்வாயே அந்த மரியாவா.....

"ஏன் உனக்குத் தெரியும் தானே அவள் என்னைப் பிரிந்து என்னைப் போல் தனித்துத் தான்

www.tamilarangam.net

வாழ்ந்தான், ஆனால் அவனுக்குப் புதிய துணை ஒன்று இப்போது கிடைத்துள்ளது. இதனால் அவன் எவ்வளவோ சந்தோசமாயிருப்பான், அதற்காகத்தான் எனது சந்தோ-சத்தையும் வாழ்த்தையும் தெரியப்படுத்துவதற்காக இன்று இருவரையும் வரவேற்கிறேன், விருந்து வைக்கிறேன் என்றார் எரிக்.

"இது என்னடா புதிய வாழ்க்கை முறைகள்" என நினைத்துக் கொண்டு பேசாமல் நின்றேன். "என்ன ஒன்று-மே பேசாமல் நிற்கிறாய்" என என்னைப் பார்த்து வினவினார் எரிக்.

"இல்லை இந்தச் சம்பவத்தையும் உங்களது வாழ்க்கை முறைகளையும் நினைத்துப் பார்க்க வியப்பாகவும் விசித்தி-ரமாகவும் தோன்றுகின்றது. உங்களுடைய வாழ்க்கை முறைகளையும் வாழும் விதங்களையும் நினைத்துப் பார்க்கி-ன்றேன், எனக்கு இப்படி ஒரு நிலைமை நினைத்துப் பார்-க்கவே முடியாமல்" என்றேன் நான்.

"நீ ஏன் இதைப் போய்ப் பெரிதாய் யோசிக்கின்றாய்... டெனிஸ் மக்களைப் பொறுத்-தவரையில் இது மிகவும் சாதாரணமான விடயங்கள் ஆனால் பொதுவாக நீ ஒன்றை மட்டும் யோசித்துப்பார், எனக்கும் மரியாவுக்கும் ஏறக்குறைய ஆறு வருட கால நட்பு ஒரு வருடமளவில் தான் பிரிந்திருந்தோம், இந்த ஒரு வருட காலத்தில் அந்த ஐந்து வருடகால அனுபவங்கள், உறவு முறைகள், மற்றும் எத்தனையோ விடயங்கள் எப்படி மறந்து போக முடியும். அந்த இனிய காலங்களை நினைத்துப் பார்க்க எனக்கு இன்னும் சந்தோசமாகவே இருக்கின்றது. அதுதான் அவளை நான் பெரிதாய் நினைக்கின்றேன். அதுதான் அவளுடைய புதிய வாழ்வுக்கு வாழ்த்துத் தெரிவிக்கிறேன்" என்-றார். மிகுந்த சந்தோசத்தோடு.

எரிக்கின் அகத்தின் அழகை முகத்தில் பூரணமாய்க் காணக் கூடியதாயிருந்தது. "எரிக் நீங்கள் எப்போதும் எதிலும் வித்தியாசமாக இருக்கின்றீ-ர்கள், எல்லோரும் உங்களைப் போல் வாழ நினைக்கின்-றார்கள், அல்லது வாழ முனைகின்றார்கள் என்றும் சொல்ல முடியாது என்றேன்.

www.tamilarangam.net


இல்லே.... கவலைப் படுவது தான் பெரும்பாலான மக்களின் வாழ்க்கையில் மிதமிஞ்சிக் கிடக்கின்றது. ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் ஒவ்வொ-ரு கவலையேதும் ஒவ்வொரு வயதுகளிலும் இருக்கத் தான் செய்கின்றது. கவலைப் படுவது என்பது எம்மை நாமே அழித்துக் கொள்வது மாதிரியே என்று நினைக்கின்-றவன் நான்! இந்த உலகம் நிரந்தரமில்லாதது. ஆனால் மிகவும் சந்தோசமானது, வாழ்க்கை கூட நிரந்தரமில்-லாதது, அது கூட கொஞ்சக் காலம் தான். ஆனால் அது கூடப் பல பேருக்கு நிரந்தரமாய் சுதந்திரமாய்க் கிடைப்-பதுமில்லை. எமக்கு கிடைக்கின்ற கொஞ்சக் கால வாழ்க்-கை ஏன் நாம் சந்தோசமாய் அமைத்துக் கொள்ளக் கூடாது. உண்மையிலே நான் சந்தோசமாய் வாழவேண்-டும் என்பதற்காகவும், மற்றவர்கள் சந்தோசமாய் இருக்க வேண்டும் என்பதற்காகத் தான் இப்படியெல்லாம் நடந்து கொள்கின்றேன்." என்று பல தத்துவங்கள் எடுத்து விட்டார்.

"எரிக் நீங்கள் எனக்குச் சிநே-கிதமாய்க் கிடைத்ததையிட்டு நான் பெரிதும் பெருமைப் படுகின்றேன். சந்தோசப்படுகின்றேன்."

"நானும் கூட நீ எனக்குச் சிநேகிதனாய் நல்ல மாணவனாய்க் கிடைத்ததையிட்டுச் சந்தோ சமடைகின்றேன்." என்றார் எரிக்.

இருவரும் ஒருவரை ஒருவர் மாறிமாறி பார்த்துச் சிரித்துக் கொண்டோம்.

"டிங்" "டிங்" கதவுமணி ஒலித்தது. "உள்ளே வரவும்" என்றார் எரிக்.

மரியா ஓடிவந்து எரிக்கைக் கட்டிப் பிடித்து முத்தமழை பொழிந்தாள். எனது கண்களிரண்டும் சந்தோசத்தால் பனித்துக் கொண்டது.

அவர்கள் இருவரது புதிய இன்பத்தை நானும் மரியாவின் புதிய நண்பனும் பார்த்துக் கொண்டு நின்றோம்.

- முற்றும் -

- முரளி -

www.tamilarangam.net

# "X"RAY எக்ஸ் கதிர் வரலாறும் அதன் பயன்களும்

அறிவியலின் முன்னேற்றம் தான் உலகின் முன்னேற்றமாகி விட்டது. நாளுக்கு நாள் அறிவியல் துறையிலே துரிதமாக மின் அணுவியல் (ELECTRONICS) பல முன்னேற்றங்களை ஏற்படுத்தி வருகின்றது. தொழில் துறையிலும் மருத்துவத் துறையிலும் பல புரட்சிகளைச் சாதித்துள்ளது.

1895 ம் ஆண்டு நவம்பர் 10 ம் திகதி ஜேர்மனியில் பௌதிகப் பேராசிரியர் வில்ஹெல்ம் கொன்ராட் றென்ட்ஜன் (WILHELM CONRAD ROENTGEN) வாயுவின் மின் இறக்கங்களை ஆராய்ந்து கொண்டிருந்தார். குறூக்ஸ் (CROOKES) குழாயைக் கொண்டு எதிர்மின் கதிர்களை (CATHODE RAYS) சோதனை செய்து கொண்டிருந்தார். குழாயின் வழியாக மின்சாரம் பாய்ந்த பொழுது மேசையின் பக்கத்தில் வைக்கப்பட்டிருந்த பேரியம் பிளாட்டினோ சயனைட் (BARIUM PLATINO CYANIDE) பூசப்பட்ட ஒரு திரை பச்சை ஒளியில் ஒளிர்வதைக் கண்டு ஆச்சரியப்பட்டார். பின்னர் கறுப்புக் காகிதத்தால் குழாயை மூடினார். ஆனால் ஒளிரும் நிலை மாறவில்லை.

ஒளிரும் தன்மை வாய்ந்த திரையை குழாயிலிருந்து இரண்டு மீட்டர் தூரத்தில் வைத்திருந்தும் கூட திரை ஒளிர்வதைக் கண்டார்.

கண்ணிற்குப் புலப்படாத ஒருவகைக் கதிர்கள் மின்சாரம் பாயும் பொழுது அக்குழாயிலிருந்து வெளிவருகின்றன என முடிவுக்கு வந்தார். அக்கதிர்களின் பண்புகள் ஒன்றுமே தெரியாததால் அதற்கு X எனப் பெயரிட்டார். இக்கதிரை றொயின்ட்ஜன் கதிர்கள் என்றும் அழைப்பர்:

1901 ம் ஆண்டில் முதன் முதலில் பௌதிகத் துறையில் நோபல் பரிசு பெற்றவரும் இவரே.

இக்கதிரைக் கொண்டு இவர் முதன்முதலாகத் தன் மனைவியின் கையை ஒளிப்படமாக எடுத்தார். அப்படம் கையெலும்பின் அமைப்பையும், அக்கையிலிருந்த திருமண மோதிரத்தையும் காட்டியது. இவரது விடாமுயற்சி தொடர்ந்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


ஒருநாள் றொய்ன்ரஜன் மின்சாரம் செல்லும் குழாயக்கருகில் நின்று ஒரு புத்தகத்தை வாசித்துவிட்டு அப்புத்தகத்தின் பக்கத்தை அடையாளம் கண்டு கொள்வதற்காக கையிலிருந்த சாவிக் கொத்தை அதில் வைத்து மூடி தற்செயலாக புத்தகத்தை மேசைமேல் இருந்த ஒளிப்பட தகட்டின் மீது வைத்துவிட்டுத் தன் ஆராய்ச்சியில் மும்முரமாயும் செய்து வந்தார்.

மறுநாள் அந்த ஒளிப்படத்தகட்டைக் கொண்டு படம் பிடித்துப் பார்த்தார். அதில் சாவிக்கொத்தும் இருப்பதைக் கண்டு ஆச்சரியமடைந்தார்.

இதைக் கொண்டு எக்ஸ் கதிர்கள் காகித அட்டைகளுக்கூடாகவும் எளிதில் ஊடுருவிச் செல்லும் தன்மை உடையது என்றும் இரும்பின் ஊடாக ஊடுருவிச் செல்வது கடினம் என்றும் முடிவுக்கு வந்தார்.

1. எக்ஸ் கதிர்களை உண்டாக்கும் விதம்
2. எக்ஸ் கதிர்களை உண்டாக்கும் கருவி எத்தகைய தன்மையைக் கொண்டதாக இருக்க வேண்டும்.

என்பது தொடரும்.

# நன்றி.

வாசகர் அரங்கத்துக்கு கடிதங்கள் எழுதி அனுப்பியவர்களுக்கு எமது உளங்கனிந்த நன்றியைத் தெரிவிக்கிறோம்.

தங்கள் அறிவுரைகளை நாம் ஏற்றுச் செயல்படுவதில் பெரும் மகிழ்ச்சியடைகிறோம்.

இப்பத்திரிகை அனைத்து வாசகர்களுக்கும் சொந்தமானதே. உங்கள் ஆக்கங்களை எங்களுக்கு அனுப்புவதற்கு எங்கள் அனுமதி தேவையில்லை.

உளம் நிறைந்த உங்கள் வாழ்த்துக்கள் சஞ்சீவியை வாழவைக்கும் என்பதில் சந்தேகமில்லை.

அன்புடன்,
சஞ்சீவி -
ஆசிரியர் குழு..

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறுகதை

# அன்பே! நீ எங்கே?

K.R

தந்தையை சிறுவயதில் இழந்துவிட்ட என்னையும் எனது தங்கையையும் இவ்வளவுக்கும் வளர்த்து ஆளாக்கிய என் தாயின் கஷ்டங்களைப் போக்குவதுதான் என் இலட்சியம்.

பொறுப்புக்களை உணர்ந்த நான் வேலைதேடி தலைநகருக்கு வந்து சிலமாதங்களாகிவிட்டன. பிரமுகர் ஒருவருடைய உதவியால் கம்பனியொன்றின் உயர்ந்த பதவியில் உத்தியோகம் கிடைத்தது.

இனிமேல் என் தாயின் கஷ்டங்கள் நீங்கிவிடும். அவள் கஷ்டப்படவேண்டிய அவசியமும் இருக்காது.

*

கம்பனியால் எனக்குத் தரப்பட்ட வீடு தலைநகரில் இருந்து சில கிலோமீற்றர் தூரத்தே உள்ள கிராமம் ஒன்றில் இருந்தது.

சாலையின் இருமருங்கும் அமைந்த எழுபதுக்கும் மேலான வீடுகள் ஆடம்பரத்தோடு விளங்கின.

அன்று விடுமுறை தினம். பொருட்கள் வாங்குவதற்காக கடையை நோக்கிச் சாலையில் சென்றுகொண்டிருந்த எனது கவனத்தை அந்த வீட்டு முன் யன்னலூடாகத் தென்பட்ட இளம் பெண்ணின் முகம் திசைதிருப்பியது.

ஒரு தடவை இருவரது பார்வைகளும் சந்தித்து மீண்டன. மீண்டும் பார்வைகள் சந்தித்தபோது அவளது கண்களும் உதடுகளும் புன்னகை பூத்தன.

மலர்மேல் மொய்க்கும் வண்டாக இருவரது உள்ளங்களும் உறவாடின.

காரிகையின் கண்ணசைவில் நிலைமறந்த என் உள்ளத்திலே இனம்புரியாத இன்ப உணர்வு. புது உறவில் கிடைத்த புதிய சுகம் என் உடல் முழுவதும் பரவியது.

நெஞ்சில் இடம்பெற்றுவிட்ட அவள் எழில் உருவம் உள்ளத்திலே இன்பவேதனையளித்தது. இரவு முழுவதும் புதிய புதிய கற்பனைகளில் கண்ட கரையில்லாத இன்பசுகத்தில் என் மனம் திளைத்தது.

www.tamilarangam.net


அவளைத் தரிசிப்பதற்காக பல தடவைகள் கடைக்குச் சென்றுவருவது வழக்கமாகிவிட்டது. பார்வைகளின் பரிமாற்றமும் சில நாட்கள் தான். நாளடைவில் அவளது அன்னையின் நட்பு எனக்குக் கிடைத்தது.

அவளது அன்னையைச் சந்திக்கும் சாட்டில் அவளோடு கதைக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. ஒருவரையொருவர் அறிமுகம் செய்துகொண்டதில் அவள் ஒரு பாடசாலை ஆசிரியை என்பதை தெரிவித்திருந்தாள்.

*

பூத்துக்குலுங்கும் புத்தம் புதுமலராய் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் அழகு கொண்ட அவள் எனக்கு வாழ்வளிக்கப் போகும் உத்தமப் பெண்ணாகவே விளங்கினாள்.

காதல் புனிதமானது; தெய்வீகமானது என்று கூறக் கேட்டிருக்கிறேன். எங்கள் காதலும் அத்தகையதுதான்.

காதல் மோகம் பாசத்தையே மறைத்துவிட்டது கம்பனியில் எனக்குக் கிடைத்த வருமானம் அத்தனையும் என் காதலுக்கு வித்திட்டவளுக்கே செலவு செய்தேன்.

நாட்கள் நகர்ந்தன.

எங்கள் காதலின் வளர்ச்சி திருமணத்துக்கு அடியெடுத்து வைக்கும் நிலை பெற்றுவிட்டது.

தமிழ் மரபின்படி சீதனம், சீர்வரிசை எதையும் நான் அவர்களிடம் கேட்கவில்லை.

திருமணம் செய்வதற்கு எனது தாயின் சம்மதமும் கேட்டு கடிதம் அனுப்பியிருந்தேன். என்னோடு கதைப்பதற்காகத் தொலைபேசியில் வந்திருந்தார்.

எங்கள் காதல் விவகாரங்களை அறிந்த என் தாய் திருமணம் செய்வதற்கு அனுமதி தர மறுத்தாள்.

பெற்றமனம் பித்து, பிள்ளைமனம் கல்லு, என்பது உண்மைதான். தாயின் வேண்டுகோளுக்கு நான் இணங்கவில்லை. காதலில் வெற்றிபெறுவதில் உறுதியாக இருந்தேன்.

"தம்பி! நீ பாழுங்கிப் பெட்டையைக் கட்டிப் போட்டு கஷ்டப்படப் போறாய். அவளைவிட்ட சீதனமாதனமென்று ஒன்றும் இல்லை. சும்மா வெறும் பெட்டையைக் கட்டி நீ கஷ்டப்படுறது மாத்திரமில்லை உன்ரை தங்கச்சியின்ரை வாழ்க்கையும் பின்னடிச்சுப் போடும். நல்லா ஒருக்கா யோசிச்சுப் பார்.

உன்ரை படிப்புக்கும் உத்தியோகத்துக்கும் உன்ர நிலையை ண்டால் ஒரு எட்டு லட்சம் வாங்கிச் செய்யலாம். எங்கடை கஷ்டங்களும் தீரும். நீ எதுக்கும் உணருக்கோ" என் தாய் கூறியவைகளை என்னால் ஏற்கமுடியவில்லை.

www.tamilarangam.net



"நான் எதுக்கும் சீதனம் ஏதும் தரமுடியுமோவென்று அவையோடை கதைச்சுப் போட்டுச் சொல்லுறன்."

என் தாயை ஒருவாறு சமாதானப் படுத்தினேன்.

"நாங்கள் சீதனமென்டு பெரிசா வீடுவாசல் தர எங்களிட்டை வசதியில்லை. ஒரு வாடகை வீடும்; அதுக்குரிய தளபாடச்சாமான்களும் ஒரு பத்தாயிரத்துக்கு நகையும் போடலாம். பிள்ளையும் உத்தியோகம் பாக்கிற. இதுதான் எங்களால முடிஞ்சது". என்று அவளது தாயார் முடிவாகக் கூறினாள்.

இந்த விபரங்களை அன்றிரவு என் தாயிடம் கூறினேன். அவருக்குத் திருப்தி ஏற்படவில்லை. மறுப்புத் தெரிவித்தாள்.

எனக்கு உண்மைகள் புரியாமல் இல்லை. இருந்தாலும் ஒரு பெண்ணைக் காதலித்துவிட்டு சீதனம் இல்லையென்பதற்காக அவளைக் கைவிட என் மனச்சாட்சி இடம் தரவில்லை. அவளுடைய அபிலாசைகளுக்கு மதிப்பளிக்கவேண்டிய எனது கடமையிலிருந்து பிறழ என்னால் முடியவில்லை.

"அம்மா! நீங்கள் சொல்லுறதெல்லாம் உண்மைதான். ஆனால் இவளும் குடும்பத்துக்கேத்த நல்ல பெண்தானே. உத்தியோகம் பாக்கிறாள். இவைகளைத் தவிர வேறு அவளிட்டை என்னத்தை எதிர்பார்க்கவேணும். இவ்வளவு நாளும் கதைச்சுப் பழகிப்போட்டு திடீரென்டு எப்பிடி நான் அவளை மறக்கிறது. அவளின்ரை மனம்தான் என்னபாடுபடும்." வார்த்தைகளை மென்று விழுங்கினேன்.

"டேய்! நான் இவ்வளவு சொல்லியும் கேட்கிறாயில்லை. எங்கடை கஷ்டத்தைப் போக்கவென்டு வந்து உழைக்கிறதெல்லாத்தையும் அவளுக்குத் தானம்பண்ணிறாய். நானும் உன்ரை தங்கச்சியும் படுகிற கஷ்டத்தைக் கொஞ்சமாவது நினைச்சனியே. கஷ்டப்பட்டு உன்னை ஆளாக்கிவிட இன்றைவரைக்கு கூத்தடிக்கிறாய். நான் கண்ணை மூடமுதல் நீ தங்கச்சியைப் பாப்பாயென்டு எனக்கு நம்பிக்கையில்லை. உன்ரை முடிவு உதுதானென்டா எங்கடை ரெண்டுபேற்றை பிரேதத்தையும் எரிச்சுப்போட்டு வந்து அவளைச் செய். இதுக்குமேல நான் கதைக்கேல்லை."

என் தாயின் அந்த வேதனையான வார்த்தைகள் காதல் வசப்பட்ட என்னை சுயநினைவுக்குக் கொண்டுவந்தன. இரு தலைக் கொள்ளியெறும்பான நிலையில் உடனே எந்த முடிவுக்கும் வரமுடியவில்லை.

அன்று இரவு மனப்போராட்டங்களின் பின் ஒரு முடிவு. காதலுக்குக் கையசைத்து விடைகொடுக்கத் தீர்மானித்துவிட்டேன்.

பயணம் போவதுபற்றி அவளிடம் கூற முடியவில்லை. அவளை எந்த முகத்தோடு நான் பார்ப்பது. அவளுக்கும் எனக்கும் இனி எந்த உறவும் இல்லை. எனவே நான் அவளைச் சந்திக்கவேண்டிய அவசியமும் இல்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மறுநாள் இரவு நானும் எனது தாயாரும் ஊருக்குப் புறப்பட்டுவிட்டோம்.

*

ஊருக்கு வந்து ஒரு வாரமாகிவிட்டது. அவள் பற்றிய எண்ணங்கள் நெஞ்சிலே நிழலாடின. அவளுடன் கழித்த அந்த இனிய நாட்கள் என் மனதில் வேதனைகளை உண்டாக்கின.

அந்த மலையடிவாரத்தில் தினமும் எங்கள் சந்திப்பு. பொழுது போவதை உணராமல் உலகை மறந்த நிலையில் பேசிய காதல் கதைகள்தான் எத்தனை.
எனது உள்ளங்கையில் அவள் தனது ஈரமான உதடுகளைப் பதிக்கும்போது என் மெய் சிலிர்க்கும்.

அன்பே! உங்கள் உதடுகளை எனது கன்னத்தில் பதித்தால் எப்படியிருக்கும்' என்றேன் கிண்டலாக.

மெல்லச் சிரித்த அவள் "அதையெல்லாம் எங்கள் இருவரது திருமணத்துக்குப் பிறகுதான்".

நாணத்தினால் அவள் முகம் சிவந்தது.

அவளது நெஞ்சத்திலே எவ்வளவு ஆசைகள், எதிர்பார்ப்புகள்.

சீதனம் இல்லையென்ற ஒரு காரணத்துக்காக அவளது ஆசைகளை நிராசையாக்கிவிட்டு வந்த எனது அயோக்யத்தனத்தை என்னவென்று சொல்வது. மென்மையான அவளது இதயத்தை காலால் மிதித்து உதைத்துவிட்டல்லவா வந்துவிட்டேன்.

கவலை கொள்வதைத் தவிர வேறென்ன செய்யமுடியும். எனது குடும்பக் கஷ்டங்களை முன்வைத்து அவளைச் சமாதானப்படுத்தும் முகமாக கடிதம் வரைந்து அனுப்பியிருந்தேன்.

*

காதலின் மகத்துவம் தெரியாத ஒரு சிலரால் ஏற்படுத்தப்பட்ட சீதனம்; சீர்வரிசை என்பன இருக்கின்ற வரையில் உண்மையான இரு காதல் உள்ளங்கள் ஒன்று சேரமுடியாது என்பது எவ்வளவு கசப்பான உண்மை.

பெண்ணை வாழவைப்பதுதான் ஆணின் கடமையென்றால்; ஒரு பெண் ஆணுக்கு சீதனம் கொடுப்பது ஏன்?

அவளுக்குக் கிடைக்கின்ற இன்பங்களுக்காக அவள் கொடுக்கும் கைக்கூலியா அல்லது கணவன் என்ற ஒருவனை விலைகொடுத்து வாங்கும் வியாபாரமா?

ஒரு பெண்ணின் மணவாழ்க்கையை இங்கு சீதனம் நிர்ணயிக்கும்போது; திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன என்பது என்ன விதத்தில் உண்மையாகும்.

என்னுள்ளே புலம்பல்கள், முணுமுணுப்புகள்; வேதனைகள்.

www.tamilarangam.net


சவரம் செய்யப்படாத என் முகத்தின் சோகத்தின் சாயல். உணவு உறக்கமில்லாமல் கண்கள் குழிவிழுந்து இளைத்துவிட்ட என் கோலம் கண்டு என்னை ஈன்றவள் கண்ணீர் விட்டாள்.

தேற்றமுயன்றேன். தோற்றுவிட்டேன். பாவம் அவள். மீண்டும் அவள் கஷ்டங்கள் தொடருகின்றன. அவளின் நலிந்த கோலம் கண்டு என் கண்கள் உடைப்பெடுத்தன. தலையணையில் முகம் புதைத்து குமுறி அழுதேன்.

என் கவலைகளை ஒரு பாத்திரத்தில் தேக்கிவைத்துவிட நினைத்து அவளை மறக்க முயன்றேன். முடியவில்லை.

*

அன்று வெள்ளிக்கிழமை. அருகில் இருக்கும் முருகன் கோவிலுக்கு என் தாயும் சகோதரியும் சென்றிருந்தார்கள்.

பகல் மணி பத்து. கடிகாரம் அடித்து ஓய்ந்தது.

நெஞ்சில் பாரம் அழுத்த கட்டிலில் புரள்கிறேன். தபால்காரனுடைய விசில் சத்தம் கேட்டு துள்ளியடித்து விரைந்தேன்.

அவளிடமிருந்து எதிர்பார்த்த கடிதம்.

நடுங்கும் கைகளால் நெஞ்சம் படபடக்க கடித உறையை அவசரமாக உடைத்தேன்.

பிரியமான அலெக்குக்கு,

என் அன்புநிறைந்த வணக்கம்.

உங்கள் கடிதம் கிடைத்தது. மிகவும் நன்றி.

உங்களை நம்பியிருந்த எனக்கு நீங்கள் செய்த கைம்மாறு இதுதானா? இதனைப் பற்றி முன் கூட்டியே கூறியிருந்தால் நான் உங்களிடம் பழகியிருக்கமாட்டேன்.

உங்களுடன் பழகி உங்கள் காதல் வார்த்தைகளை நம்பி என் உள்ளத்திலே எவ்வளவோ ஆசைகளையெல்லாம் வளர்த்துவிட்டேன்.

எனது அன்பின் ஆழத்தை நீங்கள் அறிய நியாயமில்லை. உங்கள் ஒருவரைத்தவிர வேறெவருக்கும் என் இதயத்தில் இடமில்லை. இனிமேல் எனக்கென்று மணவாழ்க்கையை நான் அமைத்துக் கொள்ளப்போவதில்லை.

இதனைப்பெயரால் என் உள்ளத்தைச் சுக்குநூறாக்கி எனது வாழ்வைப் பாழாக்கிய கொடுமையை இன்றைவரை என்னால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை.

உங்களுடன் இணைந்து வாழ முடியாத துர்ப்பாக்கியசாலி நான்.

நீங்களாவது சந்தோஷமாக இருங்கள்.

உங்கள் இல்வாழ்வுக்கு என் நல்லாசிகள்.

பி.கு:-
(இக்கடிதம் உங்கள் கைக்குச் சேரும்போது நிறைவேறாத ஆசைகளுடன் கடலோடு சங்கமித்திருப்பேன். என்னை மன்னியுங்கள்)

அன்புடன்
ALEX

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


என் மனம் எரிமலையாய்க் குமுறியது. வேதனையில் ஒரு கணம் சுயநினைவு இழந்து மீண்டும் நினைவு வந்தபோது வாய்விட்டுக் கதறினேன். புரண்டேன். சுவரோடு தலையை முட்டி மோதினேன்.

எனக்கு ஆறுதல் சொல்ல யாருமே இல்லை.

அவர் இறப்புக்கு நானே காரணம்.

இந்த வாக்கியங்கள் எனது வேதனையை அதிகரித்தன.

உள்ளத்தின் வேதனைகள் உக்கிரமடைந்து உணர்ச்சிகளின் மோதல்கள்.

தலைக்குள் பயங்கரமாக வலித்தது. உலகமே சுழல்வது போன்றிருந்தது. எங்கும் இருள். நாடியினூடாக ஏதோ ஊர்வதுபோல இருந்தது. இறுதி நேரத்தில் மூக்கிலிருந்தும் வாயிலிருந்தும் இரத்தம் வெளியேறியது.

தலைக்குள்ளோ இரத்தக் குழாய்கள் வெடித்துவிட்டன. எனது உலக வாழ்வின் இறுதி அத்தியாயம் இன்றோடு முடிவுக்கு வந்துவிட்டது.

*

பத்துமாதங்கள் சுமந்து பெற்றாள். சீராட்டி வளர்த்தாள். தன் கஷ்டங்களைப் போக்குவான் என் பிள்ளை. அவனது திருமணக் கோலம் காண்பதே என் பாக்கியம்.

என் தாயின் ஆசைகள் யாவும் கடற்கரையில் மணல் வீடுகள். இத்தனைக்கும் அவருக்கு நான் அளித்த பரிசு எனது வெற்றுடல்தான்.

அன்னையைப் பெரிதென மதித்து உலக வாழ்வைத் துறந்தமை இனத்து உயிர்துறந்தவரது மகிமையை எப்படிக் கூறுவது.

அவர் நடந்து சென்றும் பாதையில் இணைந்துகொள்ள வேண்டும். அதன்பின் நான் மீண்டும் அடையவேண்டும். என்ற - அந்தத் திருப்தியோடு. அவனிருக்கும் இடம் தேடி அவசரத்தில் செல்லுகின்றேன் நான்.

எங்கள் இருவரது புது உலக வாழ்வுக்கு சீதனமும் சீர் வரிசையும் தேவையில்லை.

[யாவும் கற்பனை]

www.tamilarangam.net


ஓவியங்கள் வரைபவர்களது ஆற்றலை வெளிக் கொணரும் முகமாக இப்பக்கத்தை ஒதுக்கியுள்ளோம். ஓவியங்கள் கறுப்பு வெள்ளையாக இருப்பது அவசியம்.

Denne side er afsat til dine ideer. Alle er velkommen til at indsende sort-hvide tigninger.



-k. Aron, Copenhagen.


NADIA Rindom
Harald
83 NR
8år

www.tamilarangam.net

இங்கே மடியுங்கள் (உள்)

# குறுக்கெழுத்துப் போட்டி 3
# KRYDS OG TVÆRS. 3

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | 6 | 7 | 8 | |
| 10 | 11 | 12 | 13 | | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | | 23 | 24 | 25 | | |
| 26 | | | 31 | 32 | 33 | 34 | | 36 |
| 37 | 38 | 39 | 40 | | 42 | | 44 | 45 |
| | 47 | 48 | 49 | 50 | 51 | 52 | 53 | 54 |
| 55 | 56 | 57 | | 59 | 60 | | 62 | 63 |
| 64 | 65 | 66 | 67 | | 69 | | 71 | 72 |
| 73 | | 75 | | 77 | 78 | 79 | 80 | |

இங்கே உங்கள் முகவரியினை எழுதுங்கள்:

.........................................................................

.........................................................................

.........................................................................

.........................................................................

அலுவலகப் பாவனைக்கு:

இங்கே வெட்டுங்கள்

www.tamilarangam.net


முத்திரை

"Chanchive" K&T:3,
Tamilsk Dansk Venskabsforening,
Danmarksgade 10,7500 Holstebro.

afs.

------------------------------------------

------------------------------------------

------------------------------------------

------------------------------------------

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மலிவு விற்பனை

கலாச்சார இல்லத்தில் அமைந்துள்ள கடையில் உபஉணவுப் பொருட்கள். உணவுப் பொருட்கள் மலிவு விற்பனைக்கு விடப்படும்.

காலம் 4,11,89 தொடக்கம்-
12.11.89 வரை.

# TILBUD

HERMED MEDDELES FRA
4.11.89 TIL 12.11.89
ER DER TILBUD I KULTURHU-SET, HVOR MAN KAN KØBE FORSKELLIGE LANDENES KRYDERIER.

TAMILSK-DANSK
VENDSKABSFORENING
HOLSTEBRO.

www.tamilarangam.net

"CHANCHIVE"
Tamilsk Dansk Venskabsforening,
Danmarksgade:10, 7500Holstebro,
Danmark.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்